# எதிர்காலம் எம் கையில்


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஒரே வார இதழ்

விலை சதம் 10 | இந்தியாவில் 10 நயா பைசா | நவம்பர் 23, 1963 | பக்கங்கள் 8 | மலர் 1 | இதழ் 12


## ஒன்றுபட்டு வளர்ப்போம்

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகளுக்கு வேண்டுகோள்!

இதன்கீழ் கையொப்பமிட்டிருக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்ஸிஸ-லெனினிஸ வாதிகளாகிய நாம், கட்சியின் ஐக்கியத்தைக் குலைத்ததென்றும், பிளவுபடுத்தும் நிலைக்குக் கொண்டுவந்ததென்றும், அதன்மூலம் கட்சியின் மதிப்பை குலைத்ததென்றும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய பெரும்பான்மை மத்தியக்கமிட்டி மேல் குற்றம்சாட்டுகிறோம். இக்குற்றச்சாட்டுகளுக்கான காரணங்கள் பின்வருமாறு:-

1. கட்சியின் சட்டதிட்டங்களுக்கிணங்க, 6-வது தேசிய மாநாட்டிலிருந்து இரண்டு வருடகாலத்திற்குள் 7-வது தேசிய மாநாட்டைக் கூட்டத் தவறியது. அதாவது, 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன் மாநாடு கூட்டப்பட்டிருக்க வேண்டும்.

2. 1957 மாஸ்கோ பிரகடனம், 1960 மாஸ்கோ அறிக்கை ஆகியவற்றின் மார்க்சிஸ, லெனினிஸக் கோட்பாடுகளைக் கைவிட்டு, நவீன திரிபுவாதத்தின் தவறான கோட்பாடுகளைக் கடைப்பிடித்தது.

3. மார்க்சிஸ-லெனினிஸக் கோட்பாட்டிற்கிணங்க தவறற்ற புரட்சிகரக் கொள்கைகளை அனுஷ்டித்ததற்காகத் தோழர்கள் பிரேமலால் குமாரசிரி, நா. சண்முகதாஸன், ஈ. டி. மூர்த்தி ஆகிய தோழர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தது.

4. இன்று கட்சிக்குள் உள்ள அபிப்பிராய பேதங்களை தீர்ப்பதற்கு உடனடியாக கட்சி மாநாடு கூட்டப்படவேண்டும் என்ற அதிகப்படியான கட்சியின், பிரதேசக் கமிட்டிகளின் வேண்டுகோளையும், கட்சியின் ஐம்பது விகிதத்திற்கு மேற்பட்ட கட்சி அங்கத்தவர்கள் மகஜர் மூலம் அனுப்பிய விண்ணப்பங்களையும் புறக்கணித்தது.

5. பலம்பொருந்திய, சக்திமிக்க ஓர் கம்யூனிஸ்ட் கட்சியை வளர்க்கத் தவறியது. சிறந்த திடமுள்ள அங்கத்தவர்களைச் சேர்க்கக்கூடிய வாய்ப்புகள் உள்ள சந்தர்ப்பத்தில், புதிய அங்கத்தவர்கள் சேர்ப்பதை நிறுத்தியது. யு.என்.பி. ஆட்சியின் கீழ் கஷ்டமான காலங்களில் இருந்த நிலைமையிலும் கேவலமான நிலைக்குக் கட்சி அங்கத்துவத்தைக் குறைத்துவிட்டது — இதன் மூலம், உண்மையில் ஸ்தாபன ரீதியாகக் கட்சியைப் பலமற்றதாக்கியதுடன், கட்சியின் சுதந்திரத்தையும், தனித்துவத்தையும் சீரழித்தது.

6. தொழிலாளர்களின் போராட்டங்களுக்குத் தலைமை தாங்க மறுப்பதும், அவர்களை எதிர்த்து நிற்பதும். குறிப்பாக, 1963 ஜனவரி-பெப்பிரவரியில் நடந்த இ.போ.ச. வேலைநிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்தது. அகில இலங்கை தொழிற்சங்கங்களின் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 21 கோரிக்கைகளை ஒட்டி ஓர் தேசிய இயக்கத்தை நடத்தத் தயங்கி நிற்பது.

7. தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்ற சமாதானமான ஓர் மார்க்கம் பாராளுமன்றமேஎன்றுபாராளுமன்ற மார்க்கத்தில் மட்டும் நம்பிக்கைவைத்து, அவசியப்பட்டால் சமாதானமற்ற முறையில் ஆட்சியைக் கைப்பற்ற தொழிலாளி வர்க்கத்தையும், எல்லாப் புரட்சிகர இயக்கங்களையும் தயார் செய்ய மறுப்பது.

8. விவசாய மக்களை அணி திரட்டத் தவறியது.

9. தொழிலாளி வர்க்கத்திற்கும், கட்சி அங்கத்தவர்கட்கும் மார்க்சிஸப் போதனை செய்யத்தவறியது. மார்க்சியத் தத்துவ நூல்களை போதிய அளவு சிங்களத்தில் மொழி பெயர்க்கத் தவறியது.

10. தொழிலாளி வர்க்க தினசரிப் பத்திரிகை ஒன்றை நடத்தத் தவறியது.

11. கட்சியின் தலைமையில் இயங்கும் வெகு ஜன ஸ்தாபனங்களையும், இயக்கங்களையும் பிளவுபடுத்த முயன்றது.

12. புரட்சிகரக் கொள்கைகளுக்காகப் போராடும் தோழர்களை அவமானப்படுத்தவும் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து பிரிக்கவும் எண்ணி வகுப்

(8-ம் பக்கம் பார்க்க)



தோழர் பிரேமலால் குமாரசிரி

துறைமுக வேலைநிறுத்தம்

## "புதிய ஹிட்லரின்" பொறுப்பற்ற நடவடிக்கை

### நீதியான போராட்டத்திற்கு ஆதரவு பெருகட்டும்

இலங்கை வர்த்தக ஊழியர்கள் சங்கத்தின் (சி.எம்.யூ.) தலைமையில், நவம்பர் 4-ந் திகதி ஆரம்பமான துறைமுகக் கார்ப்பரேஷன் தொழிலாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இக் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பின் சி. எம். யூ. நடத்தும் முதல் வேலைநிறுத்தம் இது.

கடந்த 5 ஆண்டுகாலமாக கார்ப்பரேஷன் ஊழியர்கள் நியாயமான தமது கோரிக்கைகளைத் தரும்படி நிர்வாகத்தைக் கேட்டுவந்தனர். சில கோரிக்கைகளைத் தருவதாக நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், அண்மையில் தமது வாக்குறுதிகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, கடுமையான நடவடிக்கைகளிலும், இன்று அனுபவிக்கும் சில சலுகைகளை தட்டிப் பறிக்கவும் கார்ப்பரேஷன் நிர்வாகிகள் முயன்றனர். பொறுத்துப் பொறுத்து, பொறுமை இழந்த ஊழியர்கள் பொங்கி எழுந்தனர். வேலைநிறுத்த ஆயுதத்தைக் கைக்கொண்டனர்.

வேலை நிறுத்தத்தை சமரஸமாகத் தீர்க்க, வேலை நிறுத்தத்திற்கு முன்னும், அதற்குப்பின்னும் கார்ப்பரேஷன் தலைவருடனும், புதிய போக்குவரத்து மந்திரி மஹாணும சமரவீராவுடனும் பேச்சுவார்த்தை நடத்த சி. எம். யூ. எல்லா முயற்சிகளும் செய்துள்ளது. ஆனால், "புதிய ஹிட்லராக" உருவெடுத்துள்ள மஹாணும சமரவீரா, ஒன்றுக்குமே இடந்தராததுடன், சங்க நிர்வாகிகளுக்கும், வேலைநிறுத்தம் செய்துள்ள ஊழியர்களுக்கும் கோபமூட்டும் சில வேண்டாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம்.

நீதியான இவ்வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் தருமாறு சகல தொழிலாளர்களையும், தொழிற் சங்கங்களையும் வேண்டிக்கொள்கிறோம்.

தேசியமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஏதேச்சாதிகார நிர்வாகம் ஒழிய போர்க்குரல் கிளம்பட்டும்.

## விண்வெளித் திலகங்களே வருக, வருக!

விண்ணகம் ஏகி வீர சாகஸம் செய்த

### அண்டிரியன் நிக்கலயேவ், தெரஸ்கோவா வெலன்டினு

ஆகிய இருவரும் இன்று இலங்கை வருகிறார்கள்.

விண்வெளி சென்ற முதல் தம்பதிகளை இரு கையேந்தி "வருக, வருக" என வரவேற்கிறோம்.

அமரத்துவ அக்டோபர் புரட்சி தோற்றிய ஆட்சியை-தொழிலாளர் அரசை, உலகத்து முதலாளி வர்க்கம் அன்று கிண்டல் செய்தது-ஏளனம் கூறி சிரித்தது, "சிந்திக்கும் ஆற்றலற்ற, நடமாடும் கருவிகளான இத்தொழிலாளர்களுக்கு ஆட்சி நடத்த இயலுமா? நிர்வாகத்திற்கான பட்டம் எங்கே? சர்வகலாசாலைப் படிப்பு எங்கே?" என்று கேலி செய்தது.

சிந்திக்கும் ஆற்றலற்ற தொழிலாளர் ஆட்சி, முதலாளித்துவம் 400 ஆண்டுகளில் சாதிக்காத சகலதையும் சாதனை படுத்திவிட்டது.

விஞ்ஞானத் துறையில், "சிந்திக்கும் ஆற்றலற்ற கூட்டம்" என்று கூறப்பட்ட சோவியத் தொழிலாளர்கள், உலகமே பிரமிக்கும் மிகப் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளனா.

முதன் முதலில் விண்வெளிக்கு ஸ்பூட்னிக் அனுப்பிய சோவியத் விஞ்ஞானிகள், இதைத் தொடர்ந்து முதன் முதலில் மிருகங்களை விண் சுற்ற அனுப்பினர்-லைக்கா பெயர் பெற்றது.

இதைத் தொடர்ந்து, உலகத்தை அதிசியத்திலாழ்த்திய யூரி ககாரினுடைய விண் விஜயம் நிகழ்ந்தது.

தெரஸ்கோவா விண் சுற்றி, உலகிலேயே வானகம் சுற்றிய முதல் பெண்மணியாகப் பெயர் பெற்றார்.

விண்ணகம் ஏகிய இரட்டையர்களான இத் தம்பதிகளை "வருக, வருக" என வாழ்த்தி வரவேற்கிறோம்.

# தொழிலாளர் பக்கம் நின்றேன்

# மத்தியக் கமிட்டிக்கு சண் பதில்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தோழர் என். சண்முகதாஸன் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு அவர் எழுதிய பதில் கடிதத்தை இங்கு பூரணமாகப் பிரசுரித்துள்ளோம்.

அன்புள்ள தோழ,

எனக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஒழுங்கு நடவடிக்கை அடங்கிய பிரேரணையும், 23-10-63-ல் எழுதிய தங்கள் கடிதமும் கிடைக்கப்பெற்றேன். நான் ஏன் கட்சியிலிருந்து நீக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் காட்டும் முகமாக மத்தியக் கமிட்டி கூட்டத்திற்கு என்னை அழைத்திருக்கிறீர்கள்.

தற்காலிகமாக நீக்கப்படுவதன் மூலம் தண்டிக்கப்பட்ட பின், குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும்படி உத்தரவிடும் புதுமையை முதல் தடவையாக இப்பொழுது தான் நான் கேள்விப்படுகிறேன். லெனினிஸக் கட்டுப்பாடு, ஜனநாயகம் என்பதற்கு உங்கள் அர்த்தம் இதுதானு? என்னைப் பொறுத்தமட்டில், பூரணமான அங்கத்தவனுக அன்றி, மத்தியக் கமிட்டி கூட்டத்தில் கலந்துகொள்ள என்னுல் முடியாது. உங்கள் 'குற்றச்சாட்டு'களுக்கு இதோ என் பதில்:


## குற்றச்சாட்டுக்கள்

''அரசியல் குழுக் கொள்கைக்கு மாறுகத் தனது கொள்கையைப் பரப்ப முயற்சித்தது, அரசியல் குழுவின் அதிகாரத்திற்கு அப்பால் நின்று செயலாற்றியது, கட்சியைவிட தொழிற்சங்கத்திற்கு முதலிடம் கொடுத்தது, கட்சியின் தலைமைக் குழுக்களின் ஆணையை மீறி நடந்தது'' என்று குற்றம் சாட்டப்பட்டு, மத்தியக் கமிட்டி 23-1-63-ல் என்னை கண்டித்ததாக உங்கள் கடிதம் கூறுகிறது.

ஜனவரி-பெப்ரவரி 1963-ல் நடந்த வீரமிக்க இ. போ. ச. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை ஆதரித்ததுதான் நான் செய்த மாபெரும் குற்றம். இந்த வேளையில் நீங்களும் மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மையினரும், ஏனைய இடதுசாரிக் கட்சிகளின் உத்தியோக பூர்வமான தலைவர்களுடன் வெட்கமின்றி, தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து, அவர்கள் முதுகில் குத்தினீர்கள். இதற்காகத் தான் நான் கண்டிக்கப்பட்டேன் என்று கூற மறந்து விட்டீர்கள். கம்யூனிஸ்டுகள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள், தொழிலாளி வர்க்கத்திற்கு இதைவிட மோசமான துரோகம் இழைக்கமுடியாது. என்னைப் பொறுத்தமட்டில், வீரமிக்க தொழிலாளர்களுடன் தோளோடு தோள் நின்று போராடினேன், என்னுல் இயன்ற ஆதரவையும், தலைமையையும் கொடுத்துதவினேன் என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

ஆனுல், ஒன்றை நீங்கள் மறந்துவிட்டீர்கள். வேலை நிறுத்தம் நடக்கும்போது என்னைக் கண்டித்து, அப்புதினத்தை தினசரிகளுக்கு விடுத்ததும் அதேவேளையில், இ.போ.ச. வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக ஒரு சுண்டுவிரல்தானும் உயர்த்தாது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் கூட்டங்களில் எனக்கெதிராக, பொய்ப்பிரச்சாரம், துர்ப்பிரச்சாரம் நடத்தியது போன்ற செயல்களினுல் உண்மையில் என்னை நீங்கள் அடிக்கவில்லை. இதன் மூலம் தொழிலாளர்களைப் பின்னிருந்து தாக்குகிறீர்கள். எந்த ஒரு கம்யூனிஸ்டும் செய்யத்தகாத செயல் இது. இச்செயல் எமது எதிரிகளுக்கு உதவியது, வேலை நிறுத்தத்தை முறியடிக்க உதவியது. இந்த துரோகத்திற்கு தொழிலாளி வர்க்கம் உங்களை என்றுமே மன்னிக்காது.

முதலில் என்னை நீங்கள் கண்டித்தது, இ: போ. ச. வேலை நிறுத்தத்தை நான் முன்னின்று நடத்தும் வேளையில் எடுத்த நடவடிக்கை என்பதை என்னுல் மறக்கமுடியாது. இரண்டாவதாக, என்னைத் தற்காலிகமாக நீக்கி, வெளியேற்றவேண்டும் என்று தீர்மானித்தது, முந்தியதைவிட கஷ்டமான பாரதூரமான வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் 108 நாள் போராட்டத்தை முன்னின்று நடத்தும் வேளையில் என்பதையும் மறந்துவிட முடியாது. இரண்டு சந்தர்ப்பங்களிலும், தொழிலாளர்களின் பலத்தைக் குறைத்து எதிரிகளின் (அரசாங்கத்தினதும், முதலாளிகளினதும்) பலத்தைக் கூட்டினீர்கள். நீங்கள் தாக்குவது என்னையல்ல. நான்



திடமாகக் கடைப்பிடிக்கும் வர்க்கப் போராட்டக் கொள்கைகளையே என்பது தெளிவு.

21.10.63-ல் எனது கடிதத்தில் உங்கள் மத்தியக் கமிட்டி, கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, சட்டபூர்வமாகத் தகுதியற்றது என்பதை விளக்கிக் கூறியுள்ளேன். மற்றைய குற்றச்சாட்டுக்களைக் கவனிப்போம்.

1. கட்சிக்கொள்கைகளுக்கு மாருகவும், 1957லும், 1960லும் நடந்த சர்வதேசியக் கம்யூனிஸ இயக்கத்தின் தீர்மானங்களுக்கு மாருகவும், நான் பேசியதாகக் குற்றம் சாட்டுகிறீர்கள். நான் இக் குற்றச்சாட்டுக்களைத் திரும்பவும் மறுக்கிறேன். சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்தின் முடிவுகளைப் பொறுத்தவரை, நான் சம்பூரணமாக மாஸ்கோ பிரகடனத்தையும், மாஸ்கோ அறிக்கையையும் ஆதரிக்கிறேன். இவற்றை எதிர்த்து நான் எப்பொழுதும் பேசியதில்லை. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஏனெனில் சட்டதிட்டத்துக்குட்பட்ட காலத்தில் மாநாட்டைக்கூட்ட நீங்கள் தவறிவிட்டீர்கள். நான் எழுதிய கட்டுரைகள், நான் அளித்த பேட்டிகள் ஆகியவை சம்பந்தமாகவும் இதே நிலைமை உளது.

2. இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தைக் கட்சிக்கு மேலாக நிறுத்தவும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தில் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுக்கவும், கட்சியின் தலைமைக்குப் பதிலாக எனது தனிப்பட்ட தலைமையை முன்வைக்கவும், எனது அந்தஸ்தைப் பாவித்ததாக நீங்கள் குற்றஞ்சாட்டுகின்றீர்கள். இக் குற்றச் சாட்டும் பொய்யானதே.

1963 பெப்ரவரி மாதத்தில் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் கட்சி அங்கத்தவர்களின் கூட்டமொன்றை நான் கூட்டி கட்சியின் தலைமை உறுப்பினர்களையும், அவர்களின் தீர்மானங்களையும்தாக்கியதாக நீங்கள் கூறுகின்றீர்கள். இக் கூட்டத்தை கூட்டுவதற்கு எங்களுக்கு முழு உரிமையும் உண்டு. இத்தகைய கூட்டத்தைக் கூட்டியுள்ளதும் இது வல்ல முதல்தடவை. இ.போ.ச. வேலை நிறுத்தத்தில் நான் வகித்த பங்குபற்றி, எனக்குப் பதில் கொடுக்கவும், எனது நிலைமையைத் தெளிவுபடுத்தவும் சந்தர்ப்பம் கொடாது, கட்சிக்குள் எனக்கெதிராக நீங்கள் துர்ப்பிரச்சாரம் செய்தபொழுது, உண்மையான நிலையினை விளங்கப்படுத்துவதற்காக இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் கட்சி அங்கத்தவர்களின் கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தை ஒழுங்குசெய்வதற்கு எங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

18-2-63-ல் நடைபெற்ற தொழிற் சங்கக் கூட்டமொன்றில், சி. டி. யூ. எப். ஊர்வலத்துக்கும், கூட்டத்துக்கும் கட்சித் தலைவர்களை அழைக்க வேண்டுமென சில அங்கத்தவர்கள் கோரியதை நான் எதிர்த்ததாக நீங்கள் கூறுகின்றீர்கள். இது பொய் மட்டுமல்ல; வேடிக்கையானதும் கூட. இ.போ.ச. வேலை நிறுத்தத்தின் பொழுது, உங்களின் வேலை நிறுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை அறிந்துகொண்ட தொழிலாளர்களில் எவராவது அவ்வளவு விரைவில், உங்களை அல்லது மற்றும் கட்சித் தோழர்களை சொற்பொழிவாற்ற அழைப்பார்கள் என்று நினைக்கின்றீர்களா? கூட்டத்தில் சொற்பொழிவாற்ற கட்சித் தலைவர்களை அழைக்கவேண்டுமென எந்தத் தொழிலாளியும் என்னைக் கேட்காததுடன், கட்சித் தலைவர்கள் ஏன் வரவில்லை எனவும் எந்தத் தொழிலாளியும் கேட்கவில்லை: அவர்களுக்கு அக்கேள்விக்கு மறுமொழி தெரியும்.

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த மாநாடு சம்பந்தமாக, நான் வரவேற்புக் கமிட்டியின் கூட்டம் ஒன்றில் பிரசன்னமாயிருந்தேன். இக்கூட்டத்தில் கட்சியிலிருந்து ஒரு பேச்சாளரை அழைக்கவேண்டுமெனும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. தமது வேலைநிறுத்தத்தை எதிர்த்த எவரையும் பேச அழைக்கக் கூடாதெனும் எதிர்ப்பு கோஷத்தில் இக் கருத்து எதிர்த்துத் தோற்கடிக்கப்பட்டது. அவர்கள் இத்தகைய அபிப்பிராயம் கொண்டது பற்றிக் குறை கூற முடியாதென நான் கூறத்தான் வேண்டும்.

சினிமாத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டைப் பொறுத்தவரை, அழைப்புக்களுடன் எனக்கு எதுவித பங்குமேயில்லை. ஆனுல் கட்சியை அழைத்ததெனவும், அவர்கள் பேச்சாளர் எவரையும் அனுப்பவில்லை எனவும் காரியதரிசி எனக்கு அறிவித்துள்ளார். இது எனது தவறல்ல.

28-3-63-ல் நடைபெற்ற தொழிற்சங்க பீரோவின் கூட்டத்தில் வெளிநாடு செல்வதற்கான மேதினப் பிரதிநிதிகளைப் பற்றி நான் விவாதிக்க மறுத்தது உண்மை. சி. டி. யூ. எப் செயல் கமிட்டியின் தீர்மானத்தின் அடிப்படையிலும் அரசியல் பீரோ தொழிற்சங்க கமிட்டியை முதலில் நிறுத்திப் பின் கலைத்ததையும் எதிர்க்கு முகமாகவுமே நான் இங்ஙனம் நடந்துகொண்டேன். தொழிற்சங்க கமிட்டி மீது எடுத்த நடவடிக்கைளுக்குத் தொழிற்சங்க பீரோவும் அனுசரணையாக இருந்து உதவியது.

14-10-63-ல் நடைபெற்ற சி. டி. யூ. எப். பொதுச் சபையின் கட்சி அங்கத்தவர்களின் கூட்டத்தில் நடைபெற்றது என்னவென்ருல், அக்கூட்டத்தில் கட்சியின் சில தலைவர்கள் சி. டி. யூ எப்பை உடைப்பதென மிரட்டியது எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதை எதிர்த்துப் போராட வேண்டுமெனவும், சி.டி.யூ.எப்-பின் ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டுமெனவும் நான் கூறினேன். நாம் எடுக்கக்கூடிய ஒரே நிலைமை அதுவே. உங்களில் சில சதிகாரர் நாம் கட்டி எழுப்பிய ஸ்தாபனத்தை நாசம் செய்வதைப் பார்த்தும் நாம் வாளாவிருப்போமென நீங்கள் நிச்சயமாக எதிர்பார்க்கமுடியாது.

(அடுத்த இதழில் முடியும்)

## சி. டி. யூ. எப். 16-வது மாநாடு தயாரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன

சி. டி. யு. எப். 16-வது மாநாடு டிசம்பர் 18ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை கொழும்பு, புதிய டவுண் ஹாலில் நடைபெறும். தொழிற் சங்கங்களின் பொதுக் கோரிக்கைகளின் 21-யும் வென்றெடுப்பதற்கான பொதுப் போராட்டத்திற்கும், தொழிற் சங்க இயக்கத்தின் ஐக்கியம் மேலும் வளர்வதற்கும், இம்மாநாடு மிகவும் உதவியானதாக அமையும்.

சி. டி. யு. எப் - பின் கடைசி மாநாடு இரண்டாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. இதன் பின்னர் சி. டி. யு. எப். ஈழத்திலுள்ள தலைமையான தொழிற் சங்க மத்தியஸ்தானமாக வளர்ந்துள்ளது. ஈழத்தின் பல பகுதித் தொழிலாளர்களும் சி.டி.யு.எப்-பின் கீழ் அணி திரள்கின்றனர். சி.டி.யு.எப். சென்ற இரண்டாண்டுகளில் தொழிலாளர்களுக்கு பெரும் பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொடுத்துள்ளது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை முன்நின்று நடத்தியுள்ளது.

இம் மாநாட்டிற்கு விசேஷ பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளுமாறு ஈழத்திலுள்ள முக்கிய தொழிற் சங்கங்களுக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது. அத்துடன் அல்பேனியா, கியூபா உட்பட்ட சோஷலிஸ நாடுகளின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இந்தோனேசிய, இந்திய தொழிற் சங்கப் பிரதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப் பட்டுள்ளனர். மாநாடு ஊர்வலத்துடனும் பொதுக் கூட்டத்துடனும் முடிவுபெறும்.

மட்டக்களப்பில்

# போராடினேம் வெற்றி பெற்றேம்!

## சகஜீவனம் பேசுவோர்க்கு சாட்டை


கிழக்கு மாகாணமக்களுக்கு, நகர தெருக்கள் முதல் பட்டி தொட்டிகள் எங்கும் சகலருக்கும் பரீட்சயமான பெயர் குட்டி. மாகாண அரசாங்க தலைமை அதிகாரி முதல் மண் குடிசைவாசி மகாலிங்கம் வரை சகலரும் அன்புடன் அழைக்கும் பெயர் 'குட்டி'! ஆம், கிருஷ்ணகுட்டிதான்.

கிழக்கு மாகாணத்தில், எந்த மூலையிலேனும் தொழிலாளர் போராட்டமென்றால், அங்கு குட்டி நிற்பார். விவசாயிகள் கிளர்ச்சி என்றால், அங்கு குட்டி தலைமை தாங்குவார். மக்கள் எழுச்சி என்றால், குட்டி அங்கு உயிர் ஜீவனாக நடமாடுவார்.

ஆத்மீக வாதிகள், ''கடவுள் தூணிலுமிருப்பார், துரும்பிலும் இருப்பார்'' என்பர்.

கிழக்கு மாகாணமெங்கும், மக்கள் போராட்டங்கள் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் கிருஷ்ணகுட்டி இருப்பார்.

கிழக்கு மாகாணத்தின் நிலை பற்றி அவர் இங்கு குறிப்பிடுகிறார். —ஆசிரியர்.



கே. வி. கிருஷ்ணகுட்டி
(சி. டி. யூ. எப். பிரதிநிதி,
மட்டக்களப்பு கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்.)

மட்டக்களப்புப் பிரதேசத்தில், தொழிலாளிகளினதும், விவசாயிகளினதும் மத்தியில் ''தொழிலாளி'' பத்திரிகைக்கு மிகவும் ஆதரவும், வரவேற்பும் இருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தங்களின் கலைக்கும், கலாசாரத்திற்கும், தொழிலுக்கும், தொழிலுக்கேற்ற ஊதியத்திற்கும் போராட மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் மீது ஒருசில வகுப்புவாத அரசியல் தலைவர்களின் பொய்ப்பிரசாரத்தை அம்பலப்படுத்துவதற்கும் தொழிலாளி முன்னின்று போராடும் என்று கிழக்கு மாகாணத் தமிழர்கள் ஆனந்தப் படுகிறார்கள். கிழக்கு மாகாணச் சரித்திரத்திலே இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் தொழிலாளி வர்க்கத்திற்கும், பொதுமக்களுக்கும் செய்த சேவையை அரசியல் எதிரிகளும் பாராட்டத் தகுந்த விதத்தில் போராடி வெற்றி கண்டிருக்கிறோம்; இப்போதும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறோம். முதலாளி வர்க்கம் தொழிலாளிகளை இம்சைப் படுத்துவதை எதிர்த்தும், கருஞ்சந்தை வியாபாரத்தை எதிர்த்தும் அண்மையில் வெற்றியீட்டியிருக்கிறோம். படித்த வாலிபர்கள் மத்தியில் இருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை முறியடிக்க தொழிற் பயிற்சி நிலையங்கள் ஏராளமாக நிறுவியிருப்பது மட்டுமல்லாமல், தொழில் அதிபர்களைக் கலந்து ஆலோசித்து காலிஸ்தானங்கட்கு மட்டக்களப்பி

(7-ம் பக்கம் பார்க்க)

# வாபஸ் பெறு அல்லது வெளியேறு!

## யாழ்-வண்ணார்பண்ணைக் கட்சிக் கிளை தீர்மானம்

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி கூடிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் வண்ணார்பண்ணைக் கிளை பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ளது.

1. சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எழுந்துள்ள சித்தாந்த வேறுபாடுகள் மிக முக்கியத்துவம்வாய்ந்ததாகும். இவைபற்றி கட்சியின் கீழ்மட்டத்திலிருந்து, மேல் மட்டம் வரை அதாவது, கட்சி அணிகள் முழுவதிலும் பரந்த அளவில் ஆழமாக விவாதித்து பெரும்பான்மையான முடிவை எடுப்பதுதான் ஒழுங்குமுறையாகும். இவ்வாறு செய்யாமலும், பெரும்பான்மை உறுப்பினர்களின் அங்கீகாரமொன்றையும் பெறுது, மத்தியக்கமிட்டி ஒருதலைப்பட்சமாக அறிக்கை வெளியிட்டது தவறுனது. எனவே, சர்வதேச சித்தாந்த வேறுபாடுகள் பற்றி மத்தியக் கமிட்டி விடுத்த அறிக்கையை இக்கிளை நிராகரிக்கிறது.

2. ''ஜனநாயக மத்தியத்துவம்'' என்பது கட்சியின் ஒழுங்கு விதிகளில் ஒன்றாகும். கட்சியின் மத்தியக் கமிட்டி ஜனநாயகத்தைப் புறக்கணித்துவிட்டு மத்தியத்துவத்தை மட்டும் செயல்படுத்தி, தோழர்கள் என். சண்முகதாசன், பிரேமலால் குமாரசிரி ஆகியோர் மீது எடுத்துள்ள நடவடிக்கை கட்சியின் ஒழுங்கு விதியை மீறிய செயலாகும். எனவே, இந்நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ள இக்கிளை மறுக்கிறது.

3. கட்சியினதும், கட்சியின் வாலிபர் சம்மேளனத்தினதும் பத்திரிகைகளான ''மௌபிம,'' ''தேசாபிமானி,'' ''யுவசக்தி,'' ''தருணலங்கா'' ஆகியவற்றின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து தோழர்கள் பிரேமலால் குமாரசிரி, எச். எம். பி. முகிதீன், சந்தியாகு பர்ணாண்டோ, டபிள்யூ. ஏ. தர்மதாச ஆகியோரை எவ்வித முன்னறிவித்தலும், விசாரணையுமின்றி மத்தியக் கமிட்டி நீக்கியுள்ளதை இக்கிளை கண்டிக்கிறது. இம்முடிவையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

4. சென்ற 6-வது கட்சிக் காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள ஒழுங்கு விதியின்படி இப்போதுள்ள மத்தியக் கமிட்டி காலாவதியானதாகும். எனவே, சட்டவிரோதமாக இயங்கிவரும் மத்தியக் கமிட்டிக்கு மேற்குறிப்பிட்ட தீர்மானங்களையும், நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. ஆகையால் இத்தீர்மானங்களையும், நடவடிக்கைகளையும், சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் எழுந்துள்ள சித்தாந்தப் பிரச்னை குறித்து விடுத்துள்ள அறிக்கையையும் உடனே வாபஸ் வாங்கவேண்டுமென்று இக்கிளை கோருகிறது.

5. இன்று கட்சியில் எழுந்துள்ள அரசியல் கருத்துவேறுபாடுகளைத் தீர்ப்பதற்கும், கட்சியின் ஐக்கியத்தைக் காப்பதற்கும், கட்சியின் மாநாட்டைமிக விரைவில் கூட்டுமாறு இக்கிளை கோருகிறது.

6. இன்றுள்ள மத்தியக் கமிட்டி கட்சிஉறுப்பினர்களின் ஏகோபித்த நம்பிக்கையை இழந்துள்ளதால் இருவிதகருத்துக்களையும் கொண்ட ஒரு தனிக் கமிட்டி மாநாட்டைக் கூட்டவேண்டுமென்றும் இக்கிளை கோருகிறது.

இன்றைய கதை — ஸ்டாலினிஸ்ட்

# கழுத்தறுப்பு!

''இப்ப நடக்கிற வேலையளைப் பாக்க மனிசனுக்குச் சரியான ஆத்திரம் தான் வருகுது'' அவன் கூறுகின்றான்.

''இவைகளுக்கு ஏன் தோழர் ஆத்திரப்படவேண்டும்?''

நான் அவனைக் கேட்கின்றேன்.

''இதுகளைப் பார்த்துக்கொண்டு நாங்கள் சும்மாயிருக்கிறதோ? இல்லாட்டா சந்தோஷப்படுகிறதோ?''

''அப்படி நாங்கள் சும்மா இருக்கக்கூடாது. ஆனால்....''

''நீ சொல்லுறது எனக்கு விளங்கேல்லை. இப்ப என்ன செய்யிறது?''

படபடப்புடன் கேட்டுட்டான்.

''முதல் நான் உனக்கொரு கதை சொல்லுறன்.''

''எப்ப பார்த்தாலும் உனக்கு கதை சொல்லுறது தான் வேலை!''

அவனுடைய குரலில் வெறுப்பு.

''கொஞ்சம் பொறப்பா''

''சரி, சரி சொல்லு''

''ஒரு ஊரிலே ஒரு ராசா இருந்தார். அவருக்கு, தன் மனைவியில் எப்போ பார்த்தாலும் சந்தேகம்.

''ஏன் தெரியுமா?

''அவள் நல்ல அழகி.

''தன்னைப் பார்க்கவரும் நண்பர்களுடன் ராணி கதைக்கக்கூடாது என்று ராணிக்குக் கூறினார் ராசா.

''அப்படி எந்த நண்பனாவது ராணியுடன் கதைத்தால் அவனுடைய கழுத்தை வெட்டி விடுவார் ராசா.

''வர வர ராசாவுடைய சந்தேகம் கூடிக் கொண்டே வந்தது.

''தனது மனைவியை எந்த நண்பனும் பார்க்கக்கூடாது என்ற முடிவுக்கே வந்து விட்டார். ராணியை யாராவது பார்த்தால் உடனே அவன் கழுத்தை வெட்டிவிடுவார்.

''நாளுக்கு நாள் ராசா ஒவ்வொரு நண்பனை வெட்டி, சாகடித்து வந்தார். சிலமாதங்களின் பின் ராசா எல்லா நண்பர்களையும் கொன்றுவிட்டார். அப்படிச்செய்தும் அவருடைய சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

''தனது மந்திரிமார்களும் தன் மனைவியுடன் கதைக்கக் கூடாது, அவளைப் பார்க்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

''இதனால், எல்லா மந்திரிகளையும் கொன்றுவிட்டார்.

''பின்பு தனது ஏவலாட்களைக் கொன்று குவித்தார்.

''சந்தேகம் மேலும் கூடியது.

''தனது இரண்டு சகோதரர்களையும் வெட்டிக்கொன்றுவிட்டார்.

''இக்கொடுஞ்செயல் ராணிக்கு மனவேதனையையும், வெறுப்பையும் கொடுத்தது.

''அரசனுடைய சந்தேகம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவனுக்கு இரவில் தூக்கமே இல்லை. படுக்கை அறையின் கதவை மூடிவிட்டு, வாளைத்தனது கையில் வைத்துக்கொண்டு படுக்கையில் கிடந்தபடி யோசித்துக்கொண்டிருப்பார்.

''ஒரு நாள் நடு இரவு, கதவு பூட்டப்பட்டிருக்கிறதா, திறந்திருக்கின்றதா என்ற சந்தேகம் எழுந்தது அரசனுக்கு.

''அவர் கையில் வாளுடன் எழுந்துசென்று பார்த்த பொழுது ஏதோ சத்தம் கேட்டது.

''யார் அது?'' கோபத்துடன் கத்துகின்றார்.

''அரசன் நடக்கும்பொழுது எழுந்த காலடி ஓசை, தன்னுடையது என்று அவனால் அறியமுடியவில்லை. தனது கால் சத்தத்திலே அவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

''அரசன் போட்ட சத்தத்தைக் கேட்ட ராணி எழுந்து விளக்கைத் தூண்டினாள்.

''திரைச்சேலையில் ஒரு ஆளுடைய நிழலைக் கண்டான் அரசன். அவனுக்குத் திகைப்பு! ரத்தம் கொதித்தது, கை-கால் ஆத்திரத்தில் படபடத்தன. கோபத்தில் கண்முளிகள் பிதுங்கின.

''யாரடா நீ? துரோகிப் பயலே'' என்று கத்திக்கொண்டே பாய்ந்துசென்று வாளால் வெட்டினான் அரசன்.

''திரைச்சேலை வெட்டுப்பட்டது. ஒருவரையும் காணவில்லை.

''மீண்டும் நிழலைச் சுவரில் கண்ட அரசன், சத்தம் போட்டுக்கொண்டே பாய்ந்து வெட்டினான்.

''மூளைக் கலக்கத்தில், தனது நிழல் என்பதைக்கூட அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

''தனது நிழலையே அவர் சந்தேகித்தார்.

''ராணிக்கு ஆத்திரம் வந்தது.

''அந்த நிழலை ஏன் வெட்டுகின்றாய். இதுதான் அந்த மனிதன். இவனுடைய கழுத்தை வெட்டு என்று அரசனையே சுட்டிக்காட்டினாள் ராணி.

''உடனே அரசன் தனது கழுத்தைத் தன் கையாலேயே அறுத்து, செத்து மடிந்தான்.''

''ஐயோ பாவம்''

நான் கூறிய கதையைக் கேட்ட அந்தத் தொழிலாளி அரசனுக்காக அனுதாபப்பட்டான்.

''தோழா, இதுபோலத்தான் இன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் நடக்கின்றது. சில தலைவர்கள் ஒவ்வொருவராக கட்சியைக் கட்டி வளர்க்கப் பாடுபடும் தோழர்களை கட்சியிலிருந்து விலக்கி, வர வர அநேக கட்சி அங்கத்தவர்களை இழந்து, முடிவில் கம்யூனிஸ்ட் கட்சியையும், இந்த நாட்டுத் தொழிலாளர்களையும் மக்களையும் விரைவில் இழக்கப் போகின்றார்கள்.''

''இன்றைய கட்சித் தலைவர்கள் தங்களுடைய கழுத்தைத் தாங்களே அறுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.''

''அப்போ நாங்கள் என்ன செய்யவேண்டும்?''

பொறுப்புணர்ச்சியுடன் அவன் கேட்டான்.

''தொழிலாளர்களாகிய நாம் எங்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாங்களே தலைமைதாங்க எங்களைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.''

''அதுக்கு நாங்கள் எப்பவும் தயார்'' உறுதியும், தன்னம்பிக்கையும் கலந்து அவனுடைய குரல் ஒலிக்கின்றது.



தோழர் டி.பி. அல்விஸும், அகில சீன வாலிபர் சங்க சம்மேளனத்தின் உதவி தலைவர் சென்-லி-யென்னும் கூட்டறிக்கையில் கைச்சாத்திடுகின்றனர். தூது கோஷ்டியில் சென்ற தோழர் கே. ஏ. சுப்ரமணியம் இடதுகோடியில் நிற்கிறார்.

# அகில சீன வாலிபர் சம்மேளனமும் இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சம்மேளனமும்

## வெளியிட்ட கூட்டறிக்கை

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் பொருளாளரான தோழர் டி.பி. அல்விஸும், மத்திய கமிட்டி அங்கத்தவரான தோழர் கே. ஏ. சுப்பிரமணியமும் ஜுன் மாதத்தில் அகில சீன வாலிபர் சம்மேளனத்தின் அழைப்பில் சீனம் சென்றிருந்தபொழுது கைச்சாத்திட்டு, பின்னர் மத்திய கமிட்டியினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டறிக்கையின் முக்கிய பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

★ தற்பொழுதைய சர்வ தேச நிலைமை ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களினதும், வாலிபர்களினதும் தேசிய சுதந்திரப்போராட்டங்களுக்கு மிகவும் சாதகமானது. இப்பகுதிகளில் தேசிய ஜனநாயக, புரட்சிகர இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து புதிய வெற்றிகளைப் பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஏகாதிபத்திய யுத்த ஆக்கிரமிப்புக் கொள்கைகளுக்கு எதிராகவும், சமாதானத்திற்கு ஆதரவாகவும் உலக மக்களின் இயக்கப் பலமும் வளர்ச்சியும் பெற்றுள்ளது. தேசிய ஜனநாயக இயக்கம், ஏகாதிபத்திய, பழைய புதிய காலனி முறைகளின் அடிப்படையைத் தகர்த்து, உலக சமாதானத்தைக் காப்பதற்கும், மனித முன்னேற்றத்தை வளர்ப்பதற்கும் மிகவும் உதவுகின்றது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் வாலிபர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்திலும் சமாதானத்திற்கு ஆதரவானபோராட்டத்திலும் முக்கிய பங்குவகிக்கின்றனர்.

★ ஏகாதிபத்தியமும், பழைய புதிய காலனி முறையும் ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளைவிட்டுத் தாங்களாகவே போகப் போவதில்லை. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை மாறப் போவதில்லை. அது புதைகுழியை அணுகும்பொழுது கூடுதலான மோச நடவடிக்கைகளில் ஈடுபடும் அமெரிக்க ஏகாதிபத்தியமே பலநாட்டு மக்களின் நியாயமான போராட்டங்களை நசுக்குவது; நவீன காலனி முறையின் முகாம்; ஆக்கிரமிப்பினதும் யுத்தத்தினதும் பிரதான சக்தி, உலக சமாதானத்தின் பரம சத்துரு, உலக மக்களதும் வாலிபர்களதும் பொது எதிரி. ஏகாதிபத்தியத்தைப் பற்றி எவரும் மயக்கம் கொள்ளுதல் கூடாது. மக்களும் இளைஞர்களும் ஏகாதிபத்தியத்தையும், அதை அழகுபடுத்துபவர்களையும், அதன் குரலை வெளியிடுபவர்களையும் அம்பலப் படுத்துதல் வேண்டும். பொது எதிரிக்கு எதிராகப் போராடுவதற்காகக் கூடுதலான ஐக்கியம் காணுதல் வேண்டும்.

★ சோஷலிஸ சக்திகள் ஏகாதிபத்திய சக்திகளிலும் கூடுதலான பலம் பெற்றும், சமாதான சக்திகள் யுத்த சக்திகளிலும் கூடுதலான பலம் பெற்றும் திகழும் இக்காலத்தில், எல்லா நாடுகளினதும் மக்களின் போராட்டங்களிலும் ஐக்கியத்திலும் நம்பிக்கை வைப்பதன் மூலம் உலக சமாதானத்தைக் காப்பாற்ற முடியும், உலக யுத்தத்தையும் அணு யுத்தத்தையும் தடுக்க முடியும்.

★ ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏகாதிபத்திய விரோத போராட்டங்களுக்கு பரஸ்பர ஆதரவளிப்பது கடமையாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்த, காலனி முறையின் மிச்ச சொச்சங்களை எதிர்த்த இலங்கை மக்களின் தேசிய போராட்டத்திற்கு அகில சீன வாலிபர் சம்மேளனம் உறுதியான ஆதரவளிக்கின்றது. இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் சீனத்தின் பொருளாதார வளர்ச்சியையும், சமாதானத்திற்கான நடவடிக்கைகளையும் பாராட்டுவதுடன், சீனப் பிரதேசமான தைவானில் அமெரிக்கா பிடிவாதமாக இருப்பதைக் கண்டிக்கின்றது. மேலும் சீன-இந்திய எல்லைப் பிரச்சினையின் சீனு எடுத்த சரித்திர நடவடிக்கையைப் போற்றி இந்தியாவின் நிலைமையினைக் கண்டிக்கின்றது. இருபகுதியினரும் சமாதான முடிவுக்கு வருவர் என நம்புகின்றது.

அமெரிக்காவில்

## மெத்த வளருது "கலைகள்!"

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரம் அமெரிக்க பெடரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன் என்ற ஸ்தாபனத்தின் அறிக்கையாகும்.

### 1962-ம் ஆண்டு

| | |
|---|---|
| கொலைகள் (பெரும்பாலும் 15 வயது முதல் 30 வயது வரை) | 8,400 |
| மானபங்கப்படுத்துதல் | 16,310 |
| வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடித்தல் | 95,260 |
| ஆயுதங்களுடன் அடி தடி | 1,39,600 |
| ரயிலை நிறுத்திக் கொள்ளை | 3,56,100 |
| வீடேறி திருடுதல் | 5,39,000 |
| வழிமறித்துக் கொள்ளை | 8,92,200 |

இந்த புள்ளி விபரம் கண்டு திடுக்கிடாதீர்கள். இது முதலாளித்துவ நாட்டில் காணப்படும் 'கலாச்சார'மாகும்.

## இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோள்

நமது நாட்டிலுள்ள 6 தொழிற்சங்க மத்தியஸ்தானங்களாகிய இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், தொழிற் சங்கங்களின் கூட்டுக் கமிட்டி, இலங்கைத் தொழிற் சங்கங்களின் மத்திய கவுன்சில், பொதுச் சேவைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், பொதுச்சேவைக் குழு, சிறீ லங்கா ஜாதிக குரு சங்கம் ஆகியவை ஒன்றுசேர்ந்த ஐக்கியத் தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியின் மூலம் தொழிற் சங்க ஐக்கியம் முன்னேறிக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் இம்மாநாடு நடைபெறுகின்றது. 1963 செப்டெம்பர் 29-ம் திகதி சிலிங்கோ மாளிகையில் நடைபெற்ற அகில இலங்கைத் தொழிற்சங்கங்களின் மாநாட்டில் தொழிற் சங்கங்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான முதல் முக்கிய முயற்சி எடுக்கப்பட்டது. முதல் முறையாக இந்த நாட்டின் தொ ற் சங்கங்கள் யாவும் ஒரே மேடையில் கூடி முழுத் தொழிலாள வர்க்கத்தின் சார்பாகவும் 21 கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை வென்றெடுக்கத் தீர்மானித்துள்ளன. தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரத்தில் இது மாபெரும் வெற்றியாகும்.

இந்த நாட்டு உழைக்கும் மக்கள் 15 இலட்சம் பேரின் சார்பாக இந்தக் கோரிக்கைகள் இருபத்தொன்றையும் ஒரே குரலில் முன் வைப்பதற்காக ஒன்று திரண்டிருக்கும் தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலம் பலம் பெறுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்ற காரணத்தால் முழு தொழிலாள வர்க்கமும் தமது சங்கங்களுக்கு இதற்காகப் பூரண ஆதரவு அளித்தல் வேண்டும். ஆனபடியினுல் தொழிலாள வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளை செய்து முடிக்குமாறு நாம் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஆனுல் இதிலிருந்து தொழிலாள வர்க்கம் மிகவும் முக்கியமானதோர் பாடத்தைப் பெற்றுக்கொண்டது. முழுத் தொழிலாள வர்க்க இயக்கத்தையும் பொதுக் கோரிக்கைகளின் பின் ஒன்று திரட்டும் பொழுது, முழுத் தொழிலாள வர்க்கத்தையும் ஒன்று திரட்டி அரசாங்கத்திற்கும் முதலாளிமார்கட்கும் எதிராக பெரும் ஐக்கியப் போராட்டம் நடத்தாது இக்கோரிக்கைகளை வென்றெடுக்கலாம் என எதிர்பார்க்க முடியாது. நமது தற்பொழுதைய முயற்சி இதுவே. செப்டம்பர் 29ம் திகதி மாநாடு இது சம்பந்தமாக மிகவும் முக்கியமானதோர் சம்பவமாகும். முழுத் தொழிலாள வர்க்க இயக்கத்திற்கும் தலைமை தாங்கி வழிகாட்டக் கூடிய ஐக்கிய தொழிற்சங்க மத்தியஸ்தானத்தை விரைவில் ஏற்படுத்துவதற்காக நாம் இப்பொழுது முன் செல்லுதல் வேண்டும்.

21கோரிக்கைகளில் எங்கள் கிளைச் சங்கங்களையும் பாதிக்கக்கூடிய கோரிக்கைகளைக் கீழே தருகின்றோம்.

### கோரிக்கைகள்

1. நாளொன்றுக்கு ரூபா 1/- அல்லது மாதமொன்றுக்கு ரூபா 30/- விகிதம் ஊதியம் உயர்வு.

2. எல்லாத் தொழிலாளர்கட்கும் மாதச் சம்பள முறையும், வருடாந்த சம்பள உயர்வும்.

3. எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஆகக் கூடியதாக 45 மணி நேர வேலை வாரம்.

4. எல்லாத் தொழிலாளர்களுக்கும் போதிய வீட்டு வசதி அல்லது வீட்டு வாடகைப் பணம்.

5. எல்லாத் தொழிலாளர்களுக்கும் 7 நாள் காசுவல் விடுமுறை.

6. எல்லாத் தொழிலாளர்களுக்கும் 30 நாள் வைத்திய விடுமுறை.

7. பிரசவ விடுமுறை பிரசவத்திற்கு முன் 6 வாரமாகவும் பின் 6 வாரமாகவும் அதிகரிக்கப்படுதல். கர்ப்ப காலத்தின் கடைசிப் பகுதியிலும் பிரசவத்திற்குப் பின்னரும் குறைக்கப்பட்ட வேலை நேரம்.

8. சாப்பு, காரியாலய சிப்பந்திகள் சட்டத்திற்குட்பட்ட எல்லா சட்ட ரீதியான விடுமுறைகளும் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கும் வழங்குதல்.

9. எல்லாத் தொழிலாளர்கட்கும் ஞாயிற்றுக்கிழமை சம்பளத்துடன் கூடிய லீவு நாளாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

10. வருடாந்த சம்பள உயர்வு 30 வருடங்களுக்கு நீடித்தல்.

11. சேமலாப நிதிச் திட்டத்தில் சேர்ந்த 10 வருட காலத்தின் பின்னர் எவ்வித சிக்கலுமின்றி தொழிலாளியின் பேரில் சேமித்துள்ள பணமும் தொழிலாளர் சேமலாப நிதிக்கு மாற்றியுள்ள பணமும் திருப்பி எடுக்க வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

12. சேமலாப நிதித்திட்ட ஆரம்பத்திற்கு முந்திய சேவைக்கு, வருடத்திற்கு ஒரு மாத சம்பள வீதம் விசேஷ உதவி அளித்தல் வேண்டும்.

13. தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தின் கீழ், நஷ்டஈடு மூன்று மடங்காக அதிகரிக்கப்படுவதோடு, சம்பவம் நடைபெற்ற தினத்திலிருந்து முழுச் சம்பளமும் கொடுக்கப்படல் வேண்டும்.

14. ஊழியர் சேம நிதிக்கு முதலாளிகளின் கட்டணம் முழு ஊழியத்தின் 10 வீதம் ஆகக் கூட்டப்பட வேண்டும்.

15. பெண்களின் சம்பளத்தில் எந்தவித குறைபாடுகளும் இருக்கக்கூடாது.

கட்டுரை-4

# தடுப்பவர்கள் தொலைவர் அடக்குபவர்கள் அழிவர்

## கம்யூனிஸ உலகில் தத்துவப் போர்

பிரேமலால் குமாரசிரி
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் கமிட்டி, மத்தியக் கமிட்டி அங்கத்தவர்.)

திரிபுவாதிகளுக்கும், சரித்திரப் புரட்டர்களுக்கும், தொழிலாள துரோகிகளுக்கும் தோழர் பிரேமலால் எழுதிய கட்டுரைத் தொடரில் இது இறுதி கட்டுரையாகும்.

அரை குறை அணுத் தடைப் பரீட்சை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்ததற்கு எதிராக சீனக் கம்யூனிஸ்டுகளின் மேல் சிலர் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்த ஒப்பந்தம் ஒரு ஏமாற்று என்று சீனத் தோழர்கள் கூறுகின்றனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் அணு ஆயுத இருப்பும் சேமிப்பும், அணு ஆயுதங்கள் பாவிப்பும் தடை செய்யப்படாததுடன், பூமிக்கடியில் பரிசிலனை செய்வதற்கு உத்தரவாதமளிக்கப் பட்டிருக்கிறது. இதைத்தான் சீனத் தோழர்கள் வலியுறுத்துகிருர்கள்.

ஒருவருட காலத்திற்குமுன் அமெரிக்காவினுல் முன்வைக்கப்பட்டு சோவியத் நாட்டினுல் நிராகரிக்கப்பட்ட இந்த ஒப்பந்தம், ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கிடைக்கப் பெற்ற வெற்றியே தவிர, சோஷலிசத்திற்கும், சமாதானம் விரும்பும் மக்களுக்கும் கிடைக்கப்பெற்ற வெற்றியல்ல.

சீனத் தோழர்கள் கேட்பதெல்லாம் அணு ஆயுதங்கள் பரிசிலனை தடைசெய்வது மாத்திரமல்ல, அவ்வாயுதங்களின் உற்பத்தியும், உபயோகமும் பூரணமாகத் தடை செய்யப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆயுதங்கள் சம்பூரணமாகவே அழித்தொழிக்கப்பட வேண்டும்.

### நிர்ணய சக்தி

மார்க்சிஸ லெனினிஸ தத்துவத்தின்படி சரித்திரத்தை நிர்மாணிப்பவர்கள் மக்களேயாகும். அணு ஆயுதங்கள் இருந்தாலும் சரி, இல்லாமலிருந்தாலும் சரி, சரித்திரத்தை ஆயுதங்கள் நிர்மாணிப்பது கிடையாது. தீர்மானமான முடிவை நிர்ணயிப்பது மனிதனே, ஆயுதங்களல்ல.

அணு ஆயுதங்களின் மூலம் மானிட சரித்திரத்தின் முன்னேற்ற வழியை தடை செய்யவோ அல்லது ஏகாதிபத்திய அமைப்பை அதன் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவோ முடியாது. அதன்மூலம் இன்றைய உலகில் அடிப்படையாகவுள்ள பரஸ்பர முரண்பாட்டை தீர்த்துக் கொள்ளவோ, அல்லது வர்க்கப் போராட்டம் சம்பந்தப்பட்ட நியதியை மாற்றியமைக்கவோ முடியாது. ஆகையினுல், அணு ஆயுதங்களைக் காட்டி ஏகாதிபத்தியவாதிகளின் பயமுறுத்தாட்டலுக்கு பணிந்து சமூகத்தினதும் தேசிய இயக்கங்களினதும் புரட்சிகளையும் போராட்டங்களையும் நிறுத்துவது தவறு என்று சீனக் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர்.

கடைசியாக சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தினுள்ளே இன்று நடைபெறுவது என்ன? உலகிலேயே பரந்து விரிவடைந்துள்ள பலமான உறுதிவாய்ந்த மார்க்சிஸ லெனினிஸக் கொடியை உயர ஏந்திக் கொண்டு ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்குத்தனத்தினதும் தடையை சுக்குநூருக்கி முன்னேக்கிச் செல்லும் புரட்சிகர சக்தியை உணர்வூட்டுவதன் மூலம் முழு மானிடவர்க்கத்திற்கும் பூரண விடுதலையளிக்கும் உலக பாட்டாளிவர்க்கத்தின் புரட்சியை கூடிய சீக்கிரம் வெற்றிகரமாக்கி முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப்போராடும் புரட்சிகர மார்க்சிஸ லெனினிஸக் கொள்கை ஒருபக்கம். மற்றைய பக்கம் மார்க்சிஸ, லெனினிஸத்தின் புரட்சிகர அம்சத்தை மழுங்கடிக்கச்செய்யும், தேசிய சமூக புரட்சிகர போராட்டங்களுக்கு தடை போடுவதன் மூலம், ஏகாதிபத்தியவாதிகளோடு சகஜீவன வாழ்வுக்கு ஆலோசனை கூறுவதோடு தங்களது விடுதலைக்காகப் போராடும், இன்றும் சுரண்டலுக்குட்பட்டிருக்கும் உலக ஜனத் தொகையில் மூன்றில் இருபகுதியினருக்கு ''சமாதான போட்டி''யை உபதேசம் செய்து, புரட்சியை பின்தள்ளிப் போடும் போக்காகும், இது திரிபுவாதிகளின் போக்காகும்.

சமூக அபிவிருத்தி சம்பந்தமான விஞ்ஞான நியதிகள் சரியானதாயிருந்தால், சர்வபலம் வாய்ந்த சகலதையும் உள்ளடக்கிய மார்க்சிஸ - லெனினிஸத்தின் பூகோள உண்மைகள் சரியானதாயிருந்தால், எதிர் வரும் காலகட்டத்தில் திரிபுவாதிகள் தோற்கடிக்கப்பட்டு, நேர்மையான மார்க்சிஸ லெனினிஸவாதிகள் வெற்றி கொள்வது உண்மை. இந்த வெற்றியை யாராலும் தடுக்க முடியாது.

சீன புத்தகங்களை தடை செய்வதன் மூலமோ, தற்காலிக அதிகப்படியான வாக்குகளை உபயோகித்து அடக்குமுறை செயல்களை நடத்துவதன் மூலமோ திரிபுவாதிகளின் தோல்விகள் வேகமடைகிறதே தவிர, அவர்களின் சக்தி நீடிக்காது, நிலைத்து நிற்காது.

—முடிவு.

## தத்துவ விளக்கம்

பகுதி-2

# லெனினிஸம் நீடு வாழ்க!

லெனின் பிறந்த 90வது ஆண்டு நிறைவையொட்டி, 1959 ஏப்ரலில் சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் தத்துவார்த்த மாத சஞ்சிகையான 'செங்கொடி' (ஹொங்கி) யின் ஆசிரியர் குழுவினுல் எழுதப்பெற்ற, 'லெனினிஸம் நீடு வாழ்க!' என்ற கட்டுரை, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தினசரிப் பத்திரிகை 'மக்கள் தினசரி' (ஹென்மின் நியாவோ) யின் ஆசிரியர் குழுவினுல் எழுதப்பெற்ற ''உன்னத லெனினின் பாதையில் முன்னேறுவோம்!'' என்ற கட்டுரை, திரு. லூ திங்-யி எழுதிய ''லெனின் புரட்சிகரப் பாதையின் கீழ் ஐக்கியமுறுவீர்!'' என்ற கட்டுரை ஆகிய மூன்றையும் இங்கு வெளியிட எண்ணியுள்ளோம். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இன்று புரட்சி கிளப்பியுள்ள இக் கட்டுரைகளை முதன் முதலில் இங்கு தமிழில் பிரசுரிக்கிருேம்.

புரட்சியில் பிறந்த சோவியத் அரசை நெரித்துக் கொல்லும் முயற்சியில் ஏகாதிபத்திய ஓநாய்கள் அக்காலத்திய ருஷ்ய எதிர்ப்-புரட்சிகர சக்திகளுடன் கூட்டாக ஆயுதம் தாங்கித் தலையீடு செய்தன. ஆனுல் வீரமிகு தொழிலாளி வர்க்கமும் சோவியத் யூனியனின் பல்வேறு தேசிய இன மக்களும் அன்னிய கொள்ளையரை விரட்டியடித்தனா; தாய் நாட்டிற்குள் எதிர்ப் புரட்சிக் கலவரத்தை எதிர்த்தனர். எண்ணறிய தியாகங்களின் மூலம், வீரோதாரப் போராட்டங்களின் மூலம் உன்னத சோஷலிஸக் குயரசை ஸ்திரப்படுத்தினர்.

லெனினின் பாதையின் கீழ், அக்டோபர் புரட்சியின் பாதையின் கீழ், தொழிலாளி வர்க்கப் புரட்சி பிரதான பாகம் வகித்தது. ஒரு புதிய உலகப் புரட்சி ஆரம்பித்தது. மானிட சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் உதித்தது.

அக்டோபர் புரட்சியின் மூலம் லெனினின் குரல் விரைவில் உலகெங்கும் எதிரொலித்தது. சீன மக்களின் 1919ம் ஆண்டின் ஏகாதிபத்திய–எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, மே 4 இயக்கம், தோழர் மா சே-துங் கூறியது போல், "அக்காலத்திய உலகப் புரட்சியின், ருஷ்யப் புரட்சியின், —லெனினின் அழைப்பின் பேரில் உதித்தது." ('புது ஜனநாயகம் பற்றி' மா சே-துங்கின் தேர்ந்த கட்டுரைகள்)

லெனினின் அழைப்பு சரியானதாகையால் சக்திமிக்கதாகின்றது. ஏகாதிபத்திய சகாப்தத்தின் சரித்திர சூழ்நிலைகளின் கீழ் தொழிலாளி வர்க்கப் புரட்சியும், தொழிலாளி வர்க்க சர்வாதிகாரமும் சம்பந்தமாக ஒரு தொடரான, மாற்றுரைக்க முடியாத உண்மைகளை லெனின் வெளியிட்டார்.

சிறுதொகையான முதலாளித்துவ வல்லரசுகளிலுள்ள நிதிமூலதன (Finance Capital) ஆட்சிக்கும்பல், அதாவது, ஏகாதிபத்தியவாதிகள், தங்கள் காலனிகளாகவும் சார்பு நாடுகளாகவும் மாற்றி, முழு உலகையும் அடக்கிச் சூறையிடுகின்றனர் என லெனின் சுட்டிக் காட்டினுர். ஏகாதிபத்திய யுத்தம் ஏகாதிபத்தியக் கொள்கையின் தொடர்ச்சியேயாகும். உலக சந்தைகள், மூலப் பொருள் விளையிடங்கள், முதலீட்டுத் துறைகள் ஆகியனவற்றிற்கும் உலகை திரும்பப் பங்கிடுவதற்குமாகப் போராடுவதில் ஏகாதிபத்தியாவாதிகளுக்குள்ள தணிக்கமுடியாத பேராசை காரணமாக அவர்களால் உலக யுத்தம் தொடங்கப்படுகின்றன. உலகில் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் உள்ளவரை, யுத்தத்தின் தோற்றுவாய்களும் சாத்தியக்கூறும் இருக்கும். யுத்தத்தின் தோற்றுவாய்களை விளங்கிக் கொள்ளவும், சமாதானத்திற்காகவும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடவும் வெகுஜனங்களுக்குத் தொழிலாளி வர்க்கம் வழிகாட்டவேண்டும்.

ஏகாதிபத்தியமானது ஏகபோக, பரசீவி அல்லது உழுத்துப்போகும் அழுகிப்போன முதலாளித்துவம் எனவும், அது முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் இறுதிக் கட்டம் என்பதைத் தெளிவு படுத்தினுர். ஆகவே, தொழிலாளி வர்க்கப் புரட்சி தோன்றும் தறுவாய் இது என்று லெனின் ஒப்பிட்டார். தொழிலாளி வர்க்கத்தின் ஈடேற்றம் புரட்சிப் பாதையினுல் தான் அடையப் பெறமுடியும், நிச்சயமாக சீர்திருத்தப் பாதையினுல் அல்ல. முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை இயக்கம் தன்னைக் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் உள்ள தேசிய விடுதலை இயக்கங்களுடன் கூட்டணி சேர்த்துக்கொள்ளவேண்டும்; இந்தக் கூட்டணி காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் உள்ள நிலப்பிரபுத்துவ விதேச சார்பு பிற்போக்கு சக்திகளுடனுன ஏகாதிபத்தியவாதிகளின் கூட்டணியைத் தகர்க்க முடியும். அதோடு, தவிர்க்க முடியாதபடி உலகெங்கணும் ஏகாதிபத்திய அமைப்பிற்கு சாவு மணி அடிக்க முடியும்.

★

புரட்சியா? பார்லிமெண்டா?
பாட்டாளி வர்க்கத்தின் வழி எது ?
என்ற தலைப்பில்
தலைசிறந்த ஈழத்து நாவலாசிரியர்
இளங்கீரன்
எழுதுகிறர்.
ஆரம்ப நாளை எதிர்பாருங்கள் !

சென்ற இதழ் தொடர்ச்சி

# அக்டோபர் புரட்சியும் அமரகவி பாரதியும்

ஈழத்திருநாட்டு முற்போக்குவாதிகளின், குறிப்பாக கம்யூனிஸ்ட்டுகளின் அன்புக்கும், இதய பூர்வமான நேசத்துக்கும் உரித்தானவர் தோழர் மாணிக்கவாசகர்.

தியாகம் செறிந்த அவரது வாழ்வு, இலங்கையிலுள்ள சகல கட்சித் தோழர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகும்.

பெரிய குடும்ப பாரத்தை ஏந்தியும், சிறிதேனும் கட்சி ஊழியத்தை மறவாது, இரவு பகல் நாளெல்லாம் கட்சியின் வளர்ச்சிக்குத் தன் பேச்சையும், மூச்சையும், உணர்வையும், உடலையும் புன்முறுவல் பூத்த முகத்துடன் அர்ப்பணிக்கும் தங்கம் நிகர் தோழர் இவர்.

ஆங்கில மொழியில் மேதாவிலாசம் பெற்றவர்—ஆங்கில மொழி கவிஞராகத் திகழ்பவர். மார்க்ஸிஸ லெனினிஸ தத்துவத்தில் எஃகு போன்ற உறுதி மிக்கவர்

திறமையும், திறனாய்வும், தேர்ச்சியும் மிக்க இத்தோழர், புகழ் நாடாதவர், சொல்வதை செய்பவர், தற்புகழ்ச்சியை சிறுமை எனக் கருதுபவர், பிள்ளைக் குணமுடையவர், போராட்டத்திற்கு அஞ்சாதவர்.

அவரது சென்ற வாரக் கட்டுரைத் தொடரின் இறுதிப் பகுதியை இங்கு வெளியிட்டுள்ளோம்.

"...கலி வீழ்ந்தான்,
கிருத யுகம்
எழுக மாதோ"

இரண்டே இரண்டுவரிகள். சாதாரண காவிய நயங்களுடைய இவ்வரிகள் சாகாவரம் பெற்ற தெங்ஙனம்? இந்தியாவின் வாழ்வையும், உலகின் முன்னேற்றத்தையும் மகத்தான கவிதைகளாக்கிய புதுமைக் கவி பெருமானின் ஆயிரக்கணக்கான கவிதைகளுள் இவ்விரு வரிகளுக்கு மாத்திரம் தனிச் சிறப்பு எப்படி வந்தது?

இந்திய சமுத்திரம் மிகப் பெரியது, பயங்கரமானது, சரித்திர பிரசித்திமிக்கது— ஒரே வார்த்தையில் உணர்வுக் களஞ்சியம். ஆனுல், அழகைத் தோற்றுவிக்க கடலோடி தன் உயிரைத் தியாகித்து ஆழ்கடலோடுகிறுன்; கவர்ச்சியற்ற சிப்பிகளை அள்ளி வந்து அழகு முத்துக்களைத்தேர்கிறுன். ஆழ் கடலுக்குள் சென்று அவன் ஏந்தி வந்த சுந்தர முத்துக்கள் அவை.

இவ்வரிகள் பாரதப் புலவனின் கவிதைக் கடலிலே தேர்வான முத்துக்கள்.

புரட்சிப் பாவலனின் உலக ஞானத்தை, எதிர்கால மனித வளர்ச்சியின் வெற்றிப் பாதையை நிர்ணயிக்கும் தீர்க்கதரிசனத்தை முத்து மணிகளான இவ்வரிகள் மெய்ப்பிக்கின்றன. பல்லாண்டுகள் கடந்து, வீரக் கியூபா மேற்கிலே வஜ்ர மலையாக உறுதிகள் பெறுவதையும், கிழக்குக் கோடியிலே அஞ்சா நெஞ்சம் படைத்த வீர மறவர்களைக் கொண்ட கொரியா வெற்றி நடைபோட்டு பொருள் வளம்மிக்க புதுமைச் சமுதாயத்தைத் தோற்றுவிப்பதையும் கவிநாயகன் பாரதி முன்னேக்கோடு உலகுக்கு கூறினுன். ருஷ்ய மக்கள் தோற்றிய அக்டோபர் புரட்சியின் ஆதர்ஸம் உலகெங்கும் பேரொளி பரப்பி, புதுச் சுடர் படர்த்தி பொன்யுகத்தின் கோட்டைக் கதவுகளைத்திறந்து விட்டதாக மணிக்குரல்கிளப்பினுன் புதுமைக் கவிஞன். எல்லாப் புரட்சிகளுக்கும் நடுநாயகம் ருஷ்யப் புரட்சி—அது யுகப் புரட்சி.

சாதாரண வாசகர்களுக்கு இவ்வரிகளின் மகத்துவம் இன்னும் புரியாதிருக்கலாம். இவை வெறும் சொல்லடுக்கு, கல்லடுக்கு என்றுசிலர் கருதலாம்.

சாகா வரம்பெற்ற கருத்துக்களை வலியுறுத்திய இவ்வரிகளில் இன்னும் சற்று மூழ்குவோம்.

உலகில் பல புரட்சிகள் நடந்துள்ளன. இவை பல காலங்களில் பல நாடுகளில் நடைபெற்றவை. ஆனுல், இவைகளுக்கெல்லாம்மேலான, மகத்துவமிக்க, மகோன்னத புரட்சியாகத் திகழ்ந்தது அக்டோபர் புரட்சி. வரலாறு கண்ட மற்றைய புரட்சிகளுக்கு மாறுக, அக்டோபர் புரட்சி வர்க்க அரசை வீழ்த்தி, வர்க்க பேதமற்ற நவ யுகப் புதுமைச் சமுதாயத்திற்கு அடிக்கல் நாட்டியது.

அக்டோபர் புரட்சிக்கு முன்னுள் நடைபெற்ற புரட்சிகள் அனைத்தும், சமுதாயத்தின் ஒரு வர்க்க அரசை, பிறிதொரு வர்க்கத்தின் அரசாக மாற்றுவதிலேயே முடிவுற்றன.

உதாரணமாக, பிரெஞ்சுப் புரட்சி பழைய சமுதாயத்தில் பெரும் பூகம்பமென வெடித்தது. இப் புரட்சியின் விளைவு என்ன? பிரபுத்துவ சமுதாயம் ஒழிக்கப்பட்டது உண்மை. என்றுலும், வர்க்க பேதமற்ற சமுதாயம் அதன் ஸ்தானத்தி உருவாகவில்லை. மாறுக, முதலாளித்துவ — பூர்ஷுவா வர்க்க ஆட்சி உருவாயிற்று.

மனிதனை மனிதன் சுரண்டி வாழும் கொடுமை மிகு சமுதாயத்தை, பெரும்பான்மை மனிதக் கூட்டத்தை மிகமிகச் சிறுபான்மை சோம்பேறிக் கூட்டம் அடக்கி ஆளும் அநியாய, அக்கிரம சமுதாயத்தை முற்றுக ஒழித்துக்கட்டிய ஒரே புரட்சி— உலக வளர்ச்சியின் திசைமார்க்கத்தை நிர்ணயித்த புரட்சி, சோஷலிஸ அக்டோபர் புரட்சியாகும்.

அக்டோபர் புரட்சியின் பூரண முக்கியத்துவத்தை உணர, வரலாற்றுக் காலத்தை நாம் கடந்து செல்ல வேண்டும். மனித வரலாற்றின் ஆரம்ப நாகரீக வாழ்வின், பாரதியின் இந்தியா, சீனு, எகிப்து, பெபிலோனியா ஆகியவற்றின் பென்னம்பெரிய, தொல்லுலகின் கீர்த்திமிகு வரலாறுகளையும் தாண்டிச் செல்ல வேண்டும். மனித சமுதாயத்தை நோக்கும் நாம், விஞ்ஞான ரீதியில் அவ்வரலாற்றினை அணுக வேண்டும். மனித சமுதாயம், பண்டைய விலங்குகளின் பரிணும வளர்ச்சியின் தோற்றுவாயாகும்.

மனித சமுதாயத்தின் முதல் கட்டம், சுரண்டலற்ற, அடக்குமுறையற்ற, வர்க்கபேதமற்ற, சமத்துவக் கோட்பாட்டை ஏந்திப் பிடித்த அற்புத சமுதாயமாகத் திகழ்ந்தது.

அன்று முதல், மானிடர்கள் வேண்டினுலும் வேண்டாவிட்டாலும், திட்டமிட்டாலும் திட்டமிடாவிட்டாலும், சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டிருந்தது. அடிமைச் சமுதாயம் அழித்து பிரபுத்துவ சமுதாயம் உருவாகியது. பிரபுத்துவ சமுதாயம் நீக்கி, முதலாளித்துவ சமுதாயம் வளர்ந்தது. எல்லாமே பெரும்பான்மை மக்களை அடக்கி, ஒடுக்கி ஆண்ட வர்க்கங்களின் சமுதாய முறைகள்.

மானிட சரித்திரத்திலேயே அக்டோபர் புரட்சி மற்றுமொரு யுக மாற்றத்தை உருவாக்கியது. முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டி சோஷலிஸத்தை ஸ்தாபித்தது. வர்க்க பேதமுள்ள சமுதாயத்தை முற்றுக நீக்கி, வர்க்க பேதமற்ற சமுதாயத்திற்கு அஸ்திவாரமிட்டது.

1917 அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவம் இவைதான். இப்புரட்சியின் உலக முக்கியத்துவத்தை உணர்ந்து, தனது தீர்க்கதிருஷ்டியில் கவிபொழிந்த பாரதி, இவை மூலம் அமரத்துவம் பெற்றுன்.

**மாணிக்கவாசகர்**
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி அங்கத்தவர்)

ஈழத்திருநாட்டு வாலிபர்களின்
ஒரே தமிழ்க் குரல்
யுவசக்தி
நிர்வாக ஆசிரியர்:
சந்தியாகு பெர்ஞந்து
எல்லா இடங்களிலும்
ஏஜண்டுகள் தேவை
மானேஜர், யுவசக்தி,
9, டிமெல் வீதி,
கொழும்பு 2.

## திரிபுவாதத்தின் வளர்ச்சி

1957 மாஸ்கோ கூட்டத்திற்குப் பிறகு, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அதனுடைய தவறுகளை திருத்திக் கொள்ளவில்லை. முரண்பாடாக, பிரகடனத்தை, அதிகமாக தொடர்ந்து மீறி வருகிறது. அதனுல் அவர்களுடைய திரிபுவாதம் வளர்ந்தது. இந்த வளர்ச்சியானது, உலக கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்திலுள்ள வேறுபாடுகளை துரிதப்படுத்தியது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை உணர்ச்சி வயப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு உறவை நாடியது. அவர்கள் வேகமாக, ''சமாதான சகவாழ்வு'' ''சமாதானபூர்வமான போட்டி,'' ''சமாதான மாற்றம்'' என்ற திரிபுவாத போக்குகளை ஒலி பரப்பினுர்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அனுசரணையாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால், சீனுவுக்கு எதிராக, இடைவிடாது சில நடவடிக்கைகளில் இறங்கினுர்கள். மார்க்ஸிஸ-லெனினிஸ தத்துவங்களை கையாண்டுவரும் சீன கம்யூனிஸ்ட் கட்சியை, அவர்களின் திரிபுவாதப் போக்குக்கு ஒரு தடையாகக் கருதினுர்கள். அவர்களுடைய உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டோம் என்பதும், தங்களுடைய நிலைமையை உறுதிப்படுத்திவிட்டோம் என்றும், ஆகையால் ''விரோதிகளோடு உறவும், தோழர்களோடு விரோதமும்'' கொள்ளுதல் என்ற தங்களுடைய கொள்கையை துரிதப்படுத்தலாம் என எண்ணினுர்கள்.

அமெரிக்காவிற்கு குருச்சேவ் சென்றதையொட்டி, ஐசன்ஹோவருக்கு அன்பளிப்பாக பரிசுகள் அளிப்பதற்காக, அக். 1957ல் சீனுவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே, தேசிய பாதுகாப்புக்காக தொழில் நுணுக்க உடன்படிக்கையை சோவியத் அரசாங்கம் ஜூன் 1957-ல் ஒருமுகமாகக் கிழித்தெறிந்து விட்டது. மாதிரிக்கு ஒரு அணு குண்டை உற்பத்தி செய்யும் பொறி நுணுக்கங்களை சீனுவுக்கு அளிக்க மறுத்துவிட்டது. சீன-சோவியத் யூனியனுக்கிடையே உள்ள வேறுபாடுகளை உலகத்தின் முன்பாகப் பகிரங்கப் படுத்தியது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிநாட்டு உள்நாட்டு கொள்கைகளின் மீது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் சோவியத் வெளியீடுகளும் தொடர்ந்து ஆத்திரமான தாக்குதல்களை நடத்தினுர்கள். இந்தத் தாக்குதல்கள் குருச்சேவினுலேயே அநேகமாக முழுவதும் தலைமைதாங்கி நடத்தப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையினுல் பின்பற்றப்படுகிற திரிபுவாத, பிளவுபடுத்தும் போக்கானது உலக கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின் மத்தியில் குழப்பத்தை உண்டாக்கியது. மார்க்ஸிஸமும்-லெனினிஸமும், 1956 பிரகடனமும் காலங்கடந்தது என்ற உணர்வு காணப்பட்டது. இந்த சூழ்நிலையில் மார்க்ஸிஸத்தையும் லெனினிஸத்தையும், 1957 பிரகடனத்தையும் பாதுகாப்பதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சி ''லெனினிஸம் நீடூழி வாழ்க'' என்ற புத்தகத்தை வெளியிட்டது; 1960 ஏப். லில் இரண்டு மற்ற கட்டுரைகளும் வெளியிட்டது.

தரமான தாள்கள்
அச்சுக்கு நேர்த்தியானவை
பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள்
அச்சடிக்க சிறந்த தாள்கள்
உடனடியாக விண்ணப்பியுங்கள்:
இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்
மொர்கண்டைல் ஹவுஸ்,
51/6, ராணி வீதி, கோட்டை.




செங்கொடிச் சங்கத்தின்

# போர்க்குரல்

கடந்த 18-11-63ல், சி. டி. யூ. எப். தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (செங்கொடிச் சங்கம்) காரியக் கமிட்டிக் கூட்டத்தில், கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. இக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் தோழர் எஸ். நடேசன் தலைமை தாங்கினுர்.

1. (அ) ''இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் என்.சண்முகதாஸன் அவர்களை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி அநீதமாக விலக்கியதையிட்டு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் இக் காரியக் கமிட்டிக் கூட்டம் கண்டிக்கின்றது.''

''முழு தொழிலாளர் வர்க்கமும் பிரதான போராட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தொழிலாள வர்க்கத்தின் முன்னணியில் நிற்கும் தோழர் சண்முகதாஸனுக்கு எதிராக் எடுக்கப்பட்ட நடவடிக்கை முதலாளிகளுக்கு மாத்திரம் இதய பூரிப்பையும், மகிழ்ச்சியையும் தரும். அதே வேளையில் இந் நடவடிக்கை தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் அதிர்ச்சியையும் மனக் குழப்பத்தையும் உருவாக்கும்.''

''இந்நாட்டு தொழிலாளர் இயக்கத்திற்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவராற்றிய பணியை இக்கூட்டம் பாராட்டுவதுடன், தனது பூரண நம்பிக்கையை அவர் மீது தெரிவிக்கிறது.''

(ஆ) ''சங்கத்தின் நிர்வாகக் காரியதரிசி தோழர் ஈ. டி. மூர்த்தியை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி, கட்சியிலிருந்து நீச்கியதையும் இக் காரியக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.''

''இலங்கைத் தோட்டத்தொழிலாளர் சங்கத்திற்கு அவர் செய்த தொண்டினைப் பாராட்டுவதுடன், அவர் மீது தனது பூரண நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.''

2. ''இவ்வாண்டு டிசம்பர் 19, 20, 21-ந் திகதிகளில் நடைபெறும் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் 16-வது காங்கிரஸில் பங்குகொள்ள தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பல மாகாணங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் 50 பிரதிநிதிகளையும் 100 பார்வையாளர்களையும் அனுப்ப இக் கமிட்டி தீர்மானிக்கிறது.''

''ஒரே தொழிற்சங்க மத்திய ஸ்தானம், தொழிற் சங்க இயக்கத்தின் 21 கோரிக்கைகள் ஆதிய பற்றி பரந்த அளவில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய தோட்டப் பகுதிகளெங்கும் கூட்டங்கள் நடத்த இக் காரியக் கமிட்டி தீர்மானிக்கிறது.''

''சி.டி.யு.எப். காங்கிரஸின் கடைசி தினத்தில் நடைபெறவிருக்கும் ஊர்வலத்தில் பங்கு கொள்ள திரளான தோட்டத் தொழிலாளர்களை அழைத்து வருவதென்றும் இக் கூட்டம் மேலும் தீர்மானிக்கிறது.''

''இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அடுத்த மாநாட்டை 1964, மார்ச் மாதத்தில், ஹட்டனில் நடத்த இக் காரியக் கமிட்டி தீர்மானிக்கிறது.''

திரிபுவாதிகளின் கைதி

# முத்தெட்டுவகம

## கம்யூ. வாலிபர் சம்மேளனத்திலிருந்து விலக்கப்பட்டார்

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் தலைவரான சரத் முத்தெட்டுவகமயையும் மற்றும் மத்தியக் கமிட்டி அங்கத்தவர்கள் அறுவரையும் சம்மேளனத்தில் இருந்து விலக்கியுள்ளதாக கொம்பனித்தெரு டீமெல் வீதியில் உள்ள சம்மேளனக் காரியாலயத்திலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலியர் சங்க சம்மேளன மத்தியக் கமிட்டி அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. சம்மேளனத்தின் தலைவராக அபருதுவ கிராமச் சங்கத் தலைவரான எச். பி. அமரபால அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனவும் அறிக்கை கூறுகின்றது.

வாலிப சம்மேளன மத்தியக் கமிட்டியின் அறிக்கை பூரணமாகக் கீழே தரப்பட்டுள்ளது.

''சரத் முத்தெட்டுகமவும் அவரின் கையாட்களும் கூடிய திரிபுவாதிகளின் கோஷ்டி மத்தியக் கமிட்டியினதும் செயற்குழுவினதும் கூட்டங்கள் பலவற்றில் பங்குபற்றவில்லையென முதலில் தெரிவித்துக் கொள்கின்றோம். மார்க்சிஸ-லெனினிஸத்தை உயர்த்திப் பிடிக்கும் மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை, சரத் முத்தட்டுவகம, டபிள்யூ. ஏ. நோமிஸ், எச். ஜி. எஸ். ரத்னவீர, டபிள்யூ. ஜி. புண்ணியசேன, சுனில் ஹேவகே, ஓ. பி. பியசேன, சவுலியஸ் கருணமுனி ஆகியவர்களைச் சம்மேளனத்திலிருந்து விலக்குவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளது.

''சீர்குலைவாளர்கள் சம்மேளனத்தின் காரியதரிசி எச். ஜி. எஸ். ரத்தினவீரா என அறிக்கை குறிப்பிட்டுள்ளது. திரிபுவாதிகளுக்கு எங்கள் சம்மேளணத்தில் பலம் இல்லை என்பதையும், அவர்களின் பலவீனத்தையும் இது காட்டுகின்றது என மத்தியக்கமிட்டி ஏகமனதாகத் தீர்மானித்தது:

''எச்.ஜி.எஸ். ரத்னவீரா கம்யூனிஸ்ட் கட்சி போலிட் பீரோ அங்கத்தவர். புத்தக சாலை, அச்சகத்தின் மனேஜர். குறைகளை நிரப்புவதற்குத் திரிபுவாதிகளுக்குக் கிடைத்துள்ள ஒரே துரும்பு. அவர் மவ்பிம பத்திரிகையின் ஆசிரியர் பதவியை நிரப்பினுர். ''தருண லங்கா'' பத்திரிகையின் ஆசிரியர் பதவியை நிரப்பப் போனுர். இன்னும் பல குறைபாடுகளை நிரப்புவதற்கெனப் பின்னுல் இருக்கின்றுர். இந்தக் குறை 'நிரப்புந்' தலைவர் 517 அங்கத்தவர்களைக் கொண்ட அகில இலங்கை வாலிபர் சம்மேளனத்தின் காரியதரிசியாகத் திகழ்ந்த பெருமைமிகு காரணத்தால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி ஏகமனதாக அவருக்கு வாலிபர் சம்மேளனப் பதவியிலிருந்து ஒய்வு கொடுத்தது! ஓய்வு கொடுக்கப்பட்ட இத்திரிபுவாதியைத் திரும்பவும் காரியதரிசியாகப் பிரகடனம் செய்துள்ளது, திரிபுவாதிகள் எவ்வளவிற்கு சீரழிவான நிலையில் உள்ளனர் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

''திரிபுவாதத் தலைவர்களின் கைதியாகத் திகழும் சரத் முத்தெட்டுவகமவை சம்மேளனத்திலிருந்து விலக்குவதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. சம்மேளனத்தின் தலைவராக அபருதுவ, கிராமச் சங்கத் தலைவரரன எச். பி. அமரபால தேர்ந்தெடுக்கப்பட்டார்.

''சரத் முத்தெட்டுவகம சரியான பாதையைக் கைவிட்டு, மார்க்சிஸ — லெனினிஸத்தை நாசப்படுத்துபவர்களின் தவறுன பாதையில் வீழ்ந்து, திரிபுவாதிகளின் கைதியாகி, சம்மேளனத்திற்கெதிராக சதியிலீடுபட்டுள்ளார். எங்களால் கட்டி எழுப்பப்பட்ட வாலிபர் சம்மேளனம் மார்க்சிஸ-லெனினிஸப் பாதையில் தவறுது முன் செல்லும்''

## போராடினேம் வெற்றி . . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து வெளியிடங்கட்கு ஏராளமான வேலையில்லாதவர்களை அனுப்பியிருக்கிறேம். மட்டக்களப்புச் சரித்திரத்திலே கண்டும் கேட்டும் இராதவகையில் சுப்றீம் கோர்ட்டிலே முதலாளிமார் பல ஆயிரக்கணக்கிலே செலவழித்திருந்தும் தொழிலாளிகள் ஒரு சதமும் செலவின்றி வழக்காடிக் கொண்டிருக்கிறுர்கள். மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் விவசாயிகள் மத்தியிலும், போராடுவதற்கு அணிதிரட்டிக் கொண்டிருப்பதில் பெருமைப்படுகிறேம். ஒருசில அரசியல் சீர்திருத்தவாதிகள் சொல்வது போல் அல்லாது மட்டக்களப்பில் எல்லாப் பொதுமக்களையும் அணிதிரட்டிப் போராடுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேம். இன்று கிழக்கு மாகாணத்தில் இ.போ.ச.வில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் இன்னல்களை நீக்குவதற்கு முயற்சிகள் பல செய்தவிடத்தும் அரசியல் சீர்திருத்தவாதிகளின் போக்கினுல் தோல்வியடைந்திருக்கிறேம். உதாரணமாக கிழக்கு இலங்கையில் உள்ள ஒரே ஸ்தாபனமாகிய மஞ்சற் தொடுவாய் தச்சுத் தொழில் நிலையத்தில் அண்மையில் நடந்த விஷயம் குறிப்பிடத்தக்கது. இன்று சோஷலிசம் பேசும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் தமிழ் பேசும் மக்களைப் பழிவாங்கும் நோக்குடன், இத்தொழிற்சாலைக்குக்கொடுக்க வேண்டிய ஓடர்களை எல்லாம் வெளிநாடுகளுக்குக் கொடுத்து, இத்தொழிற்சாலையில் நஷ்டம் என்று காரணம் காட்டி இதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தது. இதைக்கேள்விப்பட்டு மட்டக்களப்பு தமிழசுக்கட்சி முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையும், செனட்டர் மாணிக்கமும் இது சம்பந்தப்பட்ட மந்திரிகளைக் காவடி எடுத்துச் சென்று பேட்டி கண்டதாகப் பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள். மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. மாக்கான் மாக்கார் (யு.என்.பி.) அவர்களும் போய் தோல்வியடைந்து வந்திருக்கின்றுர். பதினுயிரக் கணக்கில் பெறுமதியுள்ள மரமரியும் இயந்திரங்கள் மட்டக்களப்பில் கொண்டுவந்து மூன்று வருடங்களாகப் பூட்டாமல் இருந்ததைத் திருப்பி எடுப்பதற்கு முயற்சி எடுத்த நேரத்தில் தொழிற்சங்க சம்மேளனம் அதில் தலையிட்டுத் தடை செய்து, லொறிக்கு முன்படுத்துப் போராடியதின் பயனுக சிறு கைத்தொழில் இலாகாத் தலைவர், தொழிற்சாலையைப் பூட்டமாட்டேன் என்றும், வேண்டிய மரம் தொழிலாளிகட்கு சைஸ் பண்ணிக் கொடுப்பேன் என்றும் உடன்படிக்கை மூலம் கைச்சாத்திட்டுத் தந்தார்.

இந்நிகழ்ச்சி பாராளுமன்ற அங்கத்தவர்களின் முயற்சியாலும், சமாதான சகஜீவனத்தாலும், தொழிலாளிகளினது உரிமையைப் பெறமுடியாது என்றும், அதனைப் போராட்ட மூலமே பெறமுடியும் என்றும் ஒரு படிப்பினையாக விளக்கியது.

இன்று மட்டக்களப்பில் தொழிற்சங்கசம்மேளனத்தின் கிளை, காத்தான்குடியில் நிறுவப்பட்டு இரண்டு வருடமாகத் தொண்டாற்றியதின் பயனுக தொழில் இலாகாவினுல் வெளிநாட்டுக்கு தொழிற் சங்கப் பயிற்சிபெறச் செல்வதற்கு உத்தரவு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேம்.

இதேபோல, வாழைச்சேனைப் பேத்தாளையில் உள்ள வாலிபர்களும், தொழிலாளிகளும் ஒன்றுசேர்ந்து நிரந்தரமாகக் கிளை ஸ்தாபித்து, காகிதத் தொழிற்சாலைத் தொழிலாளர்களையும் ஒன்று சேர்த்துப் போராட ஆயத்தமாகியிருக்கிறேம்.

## ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரல்

''தொழிலாளி'' வார ஏடாக வெளிவருவதையிட்டு வரவேற்கிறேன். இன்று தொழிலாளியைக் கண்டு முதலாளிகள் மட்டுமல்ல, திரிபுவாதிகளும் அஞ்சுகின்றனர். அந்த அளவிற்கு ''தொழிலாளி'' விழிப்புடைந்துவிட்டான். உழைத்து உரம்பெற்ற கரங்கள் எதற்கும் சளைத்தது அல்ல என்பதை வெகு சீக்கிரத்தில் நிருபிக்கப் போகிறுன். இத்தருணத்தில், உழைப்பாளர்களின் உரிமைக் குரலாக-ஒடுக்கப்பட்டோரின் போர்க் குரலாக-பாட்டாளியின் புரட்சிக் குரலாக வாரா வாரம் ''தொழிலாளி'' வருவான் என்பதை அறியும் பொழுது அளவற்ற ஆனந்தம் அடைகிறேன். சரித்திரப் புரட்டர்களுக்குச் சவக்குழியாக – திரிபுவாதிகளுக்குத் தூக்கு மேடையாக ''தொழிலாளி'' அமையட்டும். ''தொழிலாளி'' திக்கெட்டும் பரவி திரிபுவாதிகளைக் கலக்கட்டும்! ''தொழிலாளி'' வாழட்டும்! வளரட்டும்!!

வளர்க ''தொழிலாளி!''
வாழ்க மார்க்ஸிஸ-லெனினிஸம்!!
ஒழிக திரிபுவாதம்!!!

கே. கந்தையா,
(செயலாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, காங்கேசன்துறைக் கிளை.)

# 7-வது கட்சி தேசிய மாநாட்டுக்கு தயாராகுவோம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புவாத ரீதியில் துர்ப்பிரசாரத்தில் ஈடுபட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் கட்சி அங்கத்தவர்கள் கட்சித் தலைமையில் நம்பிக்கை இழக்கும் அளவிற்கு பாரதூரமானவை என்று நாம் கூறுகின்றேம். மேலும், இன்றைய மத்தியக் கமிட்டி சட்ட பூர்வமற்றது, சட்டப்படி அது காலம் கடந்தது, ஆதலால் கட்சியின் சார்பில் பேசுவதற்கு எந்த உரிமையும் அற்றது என்று நாம் கூறுகின்றெம்.

இன்றைய கட்சித் தலைமையின் தவறுகளை நிவர்த்தி செய்யவும், திரிபுவாதத்தை கட்சியிலிருந்து ஒழித்துக்கட்டவும், கட்சிக்குள் பெரும்பான்மையினராகவுள்ள,புரட்சிகரமான உண்மையான மார்க்சிஸ-லெனினிஸ சக்திகளுக்கு புதிய தலைமை அவசியம் என்பதை உணர்ந்து, அதன் மூலம் இந்த நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திற்குத் தேவைப்படும் ஓர் புரட்சிகரத் தலைமையை கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையிலும், தற்போதைய கட்சித்தலைமைஜனநாயகமானதோர் மாநாட்டைக் கூட்டமாட்டாதுஎன்றதிடமான நம்பிக்கையினுலும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது தேசிய மாநாட்டை கூடிய விரைவில் கூட்ட நாம் தீர்மானித்துள்ளோம்.

இந்த அழைப்பை ஏற்று, இந்த மாநாட்டிற்கு பேச்சாளர்களை நியமிக்கும்படியும் மாநாட்டைக் கூட்டுவதற்குத் தமது பூரண ஆதரவைத் தருமாறும், கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லா உண்மையான மார்க்சிஸ - லெனினிஸவாதிகளையும் கேட்டுக்கொள்கிறேம்.

கீழ் வருபவர்களைக் கொண்ட தயாரிப்புக் குழுவை நாம் நியமிக்கின்றேம்:-

தோழர்கள் பிரேமலால் குமாரசிரி, என்.சண்முகதாசன், டி. என். நதுங்கே, டி. கே. டி. ஜினேந்திரபால, ஹிக்கொட தர்மசேன, கா. மாணிக்கவாசகா, என். எல். பெரேரா, கே. விமலபால, கே. குலவீரசிங்கம், டப்ளியூ. எஸ். டி. சிறிவர்தன, ஏ. டி. சார்லிஸ் ஹாமி, வாட்சன் பர்ணுந்து, டப்ளியூ. ஏ. தர்மதாச, எஸ். எம். விக்கிரமசிங்க, ஏ.ஜெயசூரிய, டி.ஏ. குணசேகர, சிறில் குலதுங்க, விக்டர் சில்வா, கே. ஏ. சுப்பிரமணியம், சுசிமா, கே. வி. கிருஷ்ணகுட்டி, எஸ். ஜனப்பிரிய, காந்தி அபயசேகர, ஈ.டி. மூர்த்தி, தர்மதாச ஜெயக்கொடி, எச். ஜி. ஏ.டி. சில்வா, எஸ். எம். பி. டி. சில்வா, டி. எம். ஜே. அபயகுணவர்த்தன, எச். எம். பி. முகைதீன், ஓ. ஏ. இராமையா, டி. பி. அல்விஸ், சி. எஸ். மஞேகர், எஸ் சிவதாஸன், சமரசிரி டி. சில்வா, பி. விஜயதிலக.

இந்தக் குழுவின் செயலாளராகத் தோழர் பிரேமலால் குமாரசிரியை நியமிக்கின்றேம். இக்குழு மாநாட்டிற்கான, ஸ்தாபன அரசியல் தயாரிப்புகளைச் செய்யும்.

மேற்கூறிய பிரகடனத்தில் எமது பூரண சம்மதத்தைதெரிவித்து இதன் கீழ் நாம் கையொப்பம் இடுகின்றேம்.

1963 நவம்பர் 17-ம் திகதி.

(கைச்சாத்திடும் பிரதான தோழர்களின் பெயர்களும், அவர்கள் வகிக்கும் உத்தியோகங்களும் பின்வருமாறு:-)

1. ஏ. டி. சார்லிஸ்ஹாமி, சி. டி. யு. எப். உப-தலைவர். 2. வாட்ஸன் பெர்ணுந்து, மொரட்டுவை – ரத்மலானை கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி காரியதரிசி. 3. சிறில் குலதுங்க, இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க உப-தலைவர். 4. டி. ஹென்றி, ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர். 5. டபிள்யூ. ஏ. தர்மதாஸ, இலங்கை கம்யூனிஸ்ட், மற்றும் முற்போக்கு வாலிபர்சங்க சம்மேளனப் பொதுச் செயலாளர். 6. சமரசிரி டி. சில்வா. 7. ஏ. ஜெயசூரியா, கொழும்பு டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 8. டி. ஏ. குணசேகரா, அரசாங்க தோள் பதனிடும் பெக்டரி செயலாளர். 9. விக்டர் சில்வா, கலேக்கப்பட்ட கோட்டே டிஸ்றிக்ட் கமிட்டி செயலாளர் 10. தர்மதாஸ ஜெயக்கொடி, இலங்கை தோட்டத்.தொழிலாளர் சங்க உப-செயலாளர். 11. எச். ஜீ. ஏ. டி. சில்வா, பதுளை டிஸ்டிறிக்ட் கமிட்டி செயலாளர். 12. டி. பி. அல்விஸ், கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனப் பொதுச் செயலாளர், கொழும்பு டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 13. டி. எம். ஜி. அபயவர்தன, கம்புருபிட்டி கட்சிக் கிளை. 14. எஸ். எம். விக்ரமசிங்கா 15. எச். எம். பி. முஹிதீன், 'தொழிலாளி' ஆசிரியர், கொழும்பு கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 16. எச். ஜெய்வர்தன, சி. டி. யு. எப். உப-தலைவர். 17. ஈ.டி. மூர்த்தி, சி.டி.யூ.எப். செய்ற் கமிட்டி உறுப்பினர். 18. எஸ். ஜே. ஹேமசந்திரா, கொழும்பு கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 19. குணசேன வித்தானே, காலி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 20. எஸ். டி. போதிகொட்டுவ, கண்டி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 21. காந்தி அபயசேகரா, ரட்ணபுரி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 22. எஸ். நடேசன், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர். 23. கே. ஏ. சுப்ரமண்யம், தற்காலிக யாழ்ப்பாண கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அமைப்புச் செயலாளர், யாழ்ப் பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சம்மேளனச் செயலாளர். 24. எஸ் செல்வராஜா, யாழ்ப்பாண டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 25. ஜே. பி. ஹன்வெல, கொலன்னவை கட்சிக் கிளை செயலாளர். 26. சுஸிமா, காலி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 27. எஸ். ஜனப்பிரியா, காலி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 28. பி. வெலிவிட்டகொட, மஹாரகமை கட்சிக் கிளை. 29. எச்.பி. அமரபால, அபராதுவை கிராமக் கமிட்டித் தலைவர். 30 சுற்கௌதா, காலி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 31. கே. வி. கிருஷ்ணகுட்டி, மட்டக்களப்பு கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி செயலாளர். 32. டி. யூ. ஜெயசேகரா, இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க காலி டிஸ்றிக்ட் செயலாளர். 33. டி. அசோக்கா ஸ்ரீ பாவு, ரட்ணபுரி கட்சி டிஸ்றிக்ட் கமிட்டி அங்கத்தவர். 34. கே. டபிள்யூ. ரணசிங்க, 35. பி. ஏ. கொத்தலாவலை, கொட்டாவைக் கட்சிக் கிளை செயலாளர். 36. டி. பி.விமலகுனே. ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத் தலைவர். 36. மாறபொல விஜயரத்தின, வாலிபர் சம்மேளன கண்டி பிரதேச காரியதரிசி. 38. எஸ். எம். பீ. டீ. சில்வா, அளுத்கம கிளை. 39. டப்ளியு. ஏ. வில்சன், தலைவர் தேயிலை றப்பர் சங்கம். புறக்பொன்ட் கிளை. 40. கே. மொஹிதீன் பிச்சை, தலைவர்,சிலோன் டிறேடிங் கம்பெனி கிளை. 41. ஆர். எஸ். டீ. பாலவ, முறுதலாவ கிளை. 42. சரத் குறே, உதவி ஆசிரியர் கம்கருவா, 43. ஏ. ராமநாதன், காரியதரிசி கொச்சிக்கடைக் கிளை. 44. ஜயசோமா விஜயதிலக்க,மத்தியக் கமிட்டி உறுப்பினர்-கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம். 45. எச். பி. ஸ்டீபன். 46. எம். சி. எம். சாபி, உதவிக் காரியதரிசி ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கம். 47. ஏ. சி. பெரேரா, காரியதரிசி மஹாரகம கிளை. 48. கே. ஆரியதாஸ கமகே, காரியதரிசி கித்துலம்பிட்டிய முற்போக்குமுன்னணி. 49. சந்திரகுப்த வீரசூரிய, தெஹிவலைக் கிளை. 50. ஏ. மரியதாசன், கொழும்பு டிஸ்றிக்ட் கிளை அங்கத்தவர். 51. சா.சிவதாசன்,கட்சி முழுநேர ஊழியர், திருகோணமலை. 52. எம். ஸ்டீபன் கொஸ்தா, ஐ.எ. தொ.ச. வெள்ளவத்தை நெசவாலை கிளைத் தலைவர். 53.எஸ். காரியவாசம், ஹொரணைக் கிளைக் காரியதரிசி. 54. ஆர். ஜி. நாதன், காரியதரிசி ஹேறாட்டல் கிளை. 55. அமுகாட கருேலிஸ், காரியதரிசி வெலு மகார கிளை 56. ஓ. ஏ. ராமையா, இ. தோ. தொ. ச. அட்டன் பிரதிநிதி. 57.கே. சுணில். 58. சி. எஸ். மனேகர். 59. எம். எம். செனிவிரத்ன. இ. தொ. ச. ச. செயல் கமிட்டி உறுப்பினர். 60. தம்மிக குணதாஸ, இ. மோட்டார் தொழிலாளர் சங்க அமைப்புக் காரியதரிசி. 61. லூயிஸ் பெரேரா, கொம்பனித்தெருக் கிளை பொருளாளர். 62. டபிள்யூ. எம். ரம்பண்டா, மாபோபிட்டிய கிளை. 63 வி. தும்மிலன். 64. எம். வி. கந்தையா, கொச்சிக்கடை வடக்குக் கிளை. 65. யூ. சிறிபால. 66. விஸ்வாமித்ர 67. டபிள்யூ. டி.பியானந்தை, காலி டிஸ்றிக் கமிட்டி உறுப்பினர். 68. கே. ஆர்.டி.சில்வா,காலி டிஸ்றிக்ட் கமிட்டி உறுப்பினர். 69. மனேகர் இந்திரா. 70. ஜினதாஸ உயன்கேவ, தெஹிவளை கிளைக் காரியதரிசி. 71. ஏ. விக்ரமசூரிய, 72. டி.டீ.எம். வில்சன் டீ சில்வா, பெந்தொட்ட கிளைக் காரியதரிசி, 73. எஸ். எஸ். டி சில்வா. மொறகல கிளைக் காரியதரிசி. 74. எஸ். டி. சாகுல் ஹமீது, இலங்கை துறைமுக தொழிலாளர் சங்க உப-தலைவர். 75. கே. விக்டர், இ.து.தொ.ச. காரியக் கமிட்டி உறுப்பினர். 76. பி. எக்மன், தலைவர் இ.து.தொ. சங்கம், 77. என். எல். வில்லியம், துறைமுகக் கிளை. 78. கே. ஜெஸ்டின் பெர்ணுந்து, கல்கிசை கிளைக் காரியதரிசி. 79. எம். எம். சுபைர், கிராண்ட்பாஸ் கிளை. 80. டி. டயனிஸ் சில்வா, ஹேறாட்டல் கிளை 81. டபிள்யூ. டீ. சோமபால, வத்தளை கிளைக் காரியதரிசி 82. ஜினதாச விஸ்வாமித்திர, பதுளை பிரதேச கமிட்டி உறுப்பினர் 83. ஆர். இரத்னபிரிய, பதுளை பிரதேசக் கமிட்டி உறுப்பினர் 84. ஐ. கருணரத்ன, பதுளை நகரக் கிளை காரியதரிசி 85. ஜே. செரியத், வெள்ளவத்தை தெற்குக் கிளை காரியதரிசி 86. எஸ், தம்பி 87. கொலின் சில்வா, பண்டாரவலை கிளைக் காரியதரிசி 88. இந்துருவ சேன, 89 டீ.சீ. ஜேமிஸ், சாலமுள கிளைக்காரியதரிசி 90 கே. சரத், 91 ஆர். ஏ. விஜயதாச, மாளிகாகந்த கிளைக் காரியதரிசி 92 விஜிதா சிறிவர்தன, கேகாலை கிளைக் காரியதரிசி 93 எஸ். பீ. ஆரியதாச, என்ஜினியரிங் கிளைக் காரியதரிசி 94. எம் பி பங்ஞாதாஸ, உணவதுண கிளை 95. வீ ஜயதிலக்க, பண்டாரவளை கிளை 96. பீ விஜயசிரி, பல்கலைக்கழக கிளைக் காரியதரிசி 97 எஸ். சேனசிங்ஹ 98 ஏ. துடுஹேன 99 கே. ஜே. பீ. 100 எம். தனபால, றுவான்வெல கிளைக் காரியதரிசி 101 மெனிக்கே ஜயசூரிய, முற்போக்கு மாதர் முன்னணி காரியக் கமிட்டி உறுப்பினர் 102 ஞானவதி ஹங்வல, முற்போக்கு மாதர் முன்னணி காரியக் கமிட்டி உறுப்பினர் 103 பீ. டி. ஐரீன் விஜயலத்தா, முற்போக்கு மாதர் முன்னணி காரியக் கமிட்டி உறுப்பினர் 104 பிரேமானி விதான ரணசிங்க, மு.மா.மு. 105 மெனிக்கே குமாரசிரி இணைக்காரியதரிசி மு.மா.மு, 106 எம். எஸ். எம். மொஹிதீன், புத்தளம் கிளை காரியதரிசி 107 சிறில் ஆர். டீ. சில்வா, இ. மோட்டார் தொழிலாளர் சங்கம் 108 டீ. டீ. பெரேரா, கெஸ்பாவ கிளைக் காரியதரிசி 109 நா. சண்முகதாசன், மத்திய கமிட்டி உறுப்பினர் 110 டி. என். நதுங்கே மத்தியக் கமிட்டி உறுப்பினர் 111 டி. கே. டி. ஜினேந்திரபால, பத்தியக் கமிட்டி உறுப்பினர் 112 க. மாணிக்கவாசகர், மத்தியக் கமிட்டி உறுப்பினர் 113 என். எல். பெரேரா, மத்தியக் கமிட்டி உறுப்பினர் 114 ஹிக்கொட தர்மசேன,மத்தியக் கமிட்டி உறுப்பினர் 115 டபிள்யூ. எஸ். டி. சிரிவர்தன, மத்தியக் கமிட்டி உறுப்பினர் 116 கே. குலவிரசிங்கம், மத்தயக் கமிட்டி உறுப்பினர் 117 கே விமலபால, மத்தியக் கமிட்டி உறுப்பினர். 118 பிரேமலால் குமாரசிரி, மத்தியக் கமிட்டி உறுப்பினர்.

★

## தொழிலாளி - கம்கருவா வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| முன் வரவு | ரூ. | 101 00 |
| கமர்ஸியல் பவர் ஹார்பர் கிளை | | 10 00 |
| கே. கந்தையா | | 10 00 |
| திருமதி முத்து தந்திரி | | 5 00 |
| டி. ஏ. லியனகே | | 5 00 |
| ஆர். எம். சமன் | | 2 00 |
| வெ. அ. தர்மதாச | | 2 00 |
| ரி. டி. எம். வில்சன் சில்வா | | 2 00 |
| ஆர். ஏ. ஜினசேன | | 1 00 |
| கே. பி. சோமபால | | 1 00 |
| சிசிலியாவதி பெரேரா | | 1 00 |
| பாக்கியம் | | 1 00 |
| கிளேரா | | 1 00 |
| அலோஸியஸ் | | 1 00 |
| எம். வி. நந்தசேன | | 1 00 |
| எச். எல். தோமஸ் | | 1 00 |
| விக்டர் டி. சில்வா | | 1 00 |
| எச். பி. ஆரியதாச | | 1 00 |
| ஈ. ஏ. லியனகம | | 1 00 |
| லியோ ஹரிச்சந்திர | | 1 00 |
| என். ஆர். சிரில் | | 1 00 |
| மொத்தம் | | 150 00 |

பதிப்பித்து வெளியிடுபவர் ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
அச்சிட்டது: ஆர்.ஜே.ஆர். அச்சகம், 90/1, கியூ வீதி, கொழும்பு 2.